பக்கங்கள் 21+4

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | கார்த்திகை 29 திங்கட்கிழமை 15.12.2025 | அதிர்வு 138

## பாடசாலைகள் நாளை திறப்பு

பாதுகாப்பு முகாம்களாகப் பயன்படுத்தப்படும் பாடசாலைகள் மற்றும் தொடர்ந்தும் அனர்த்த நிலையிலுள்ள பாடசாலைகளைத்தவிர, ஏனைய அனைத்துப் பாடசாலைகளும் நாளை 02▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# இலங்கை மீண்டெழ உதவி கோரும் சஜித்

## ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதியுடன் பேச்சு

ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பிரதிநிதியை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இன்று சந்தித்துப் பேச்சு நடத்தினார்.


கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது. 02▶

## சீனாவின் உயர்மட்டத் தலைவர் இலங்கை விஜயம்

சீனாவின் உயர்மட்ட அரசியல் தலைவர் ஒருவர் கொழும்புக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

எதிர்வரும் 23 ஆம் திகதி அவரது விஜயம் இடம்பெறும் என்று ஆங்கில வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சீன அரசின் மூன்றாவது அதிஉயர் அதிகாரம் படைத்தவரான, சீன தேசிய மக்கள் காங்கிரசின் நிலையியல் குழுத்தலைவரான சோ லெஜி என்பவரே இருநாள் விஜயமாக இலங்கை வருகின்றார். 02▶




உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally



# இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் தம்மிக்க ரணதுங்க கைது!

இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் முன்னாள் தலைவர் தம்மிக்க ரணதுங்க இலஞ்ச, ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்யும் ஆணைக்குழுவால் இன்று கைது செய்யப்பட்டுள்ளார்.

2017-2018 ஆண்டுகளுக்கான எரிபொருள் கொள்முதல் செய்வதற்காக திட்டமிடப்பட்டிருந்த மூன்று நீண்ட கால டெண்டர்களை இரத்துச் செய்து, அதற்குப் பதிலாக அதிக விலைக்கு



ஸ்பாட் டெண்டர்களை மேற்கொண்டதன் மூலம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குக் கிட்டத்தட்ட 800 மில்லியன் ரூபா இழப்பை ஏற்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் மேலதிக விசாரணைகளின் பின்னர் கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### சீனாவின்...

பேரிடருக்குப் பின்னர், இலங்கைக்கு உதவுவதில் இந்தியாவும், அமெரிக்காவும் அதிகளவில் கவனம் செலுத்தி வருகின்றது.

இந்நிலையிலேயே தமது உதவி திட்டத்தை விஸ்தரிக்கும் நடவடிக்கையில் சீனாவும் இங்கியுள்ளது.

இலங்கை வரும் சீன உயர்மட்டத் தலைவர் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் அரச அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

### இலங்கை மீண்டெழ...

டித்வா சூறாவளி புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுக்கும் நோக்கிலேயே மேற்படி சந்திப்பு நடந்தது என்று எதிர்க்கட்சித் தலைவரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கை வங்குரோத்து நிலையை எதிர்கொண்டிருந்தது. அவ்வேளை நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாண்மைகள் மற்றும் தொழில் முனைவோரை தொழில் ரீதியாக கட்டியெழுப்புவதற்கு உதவி வழங்கப்பட்டது.

ஆசிய அபிவிருத்தி வங்கி 100 மில்லியன் டொலர் தொகையை நன்கொடையாக வழங்கியமைக்கு எதிர்க்கட்சித் தலைவர் இதன்போது நன்றி தெரிவித்தார்.

அத்துடன், தற்போதைய பேரிடர் நிலையைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள அழிவுகள் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெளிவுபடுத்தினார்.

இந்த இக்கட்டான நேரத்தில் இலங்கை மீண்டும் எழுந்து நிற்பதற்குத் தேவையான ஆதரவுகளைப் பெற்றுத் தருமாறும் சஜித் கோரிக்கை விடுத்தார்.

### பாடசாலைகள்...

செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்படும் என்று அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்தார்.

நிவாரண முகாம்களில் தற்போது சுமார் 7 ஆயிரம் பேர் தங்கியுள்ளனர். அவர்களை 2 அல்லது 3 மாதங்களுக்குள் மீளக் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நிவாரண உதவிகளைப் பகிர்ந்தளிப்பதில் அல்லது அத்தியாவசிய சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் மக்களுக்கு ஏதேனும் பிரச்சினைகள் இருப்பின்,1904 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்து முறைப்பாடுகளைத் தெரிவிக்க முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மண்சரிவு அல்லது அனர்த்தங்களுக்கு முகங்கொடுத்தவர்களை குடியமர்த்துவது தொடர்பாக அவர் தெரிவித்ததாவது:-

"இவர்களுக்கு வழங்க முடியுமான பொருத்தமான அரச காணிகளின் தகவல்களை வழங்குமாறு அனைத்து மாவட்ட செயலாளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் தரவுகளின் அடிப்படையில், பகுதி அளவில் சேதமடைந்த வீடுகளில் ஆபத்து இல்லை எனக் கண்டறியப்பட்டால், அவர்களை மீண்டும் அந்த வீடுகளிலேயே குடியேற்ற முடியுமா என்பது குறித்து ஆராய்ந்து நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

வீடுகளை முழுமையாக இழந்தவர்களைக் குடியமர்த்துவதே தற்போதுள்ள பிரதான சவாலாகும். இதற்காக அரசு முன்னெடுத்துள்ள விசேட வேலைத் திட்டத்தை விரைவாகச் செயற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது." - என்றார்.

# ஆஸியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் இலங்கையர் எவரும் இலக்காகவில்லை!

## வெளிவிவகார பிரதி அமைச்சர் தெரிவிப்பு



ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் போண்டி கடற்கரையில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் இலங்கையர் எவரும் காயமடையவில்லை என்று வெளிவிவகார பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் ஆராய்ந்து வருவதாகவும், தகவல்களைப் பெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிட்னி நகரின் மிகவும் பிரபலமான போண்டி கடற்கரையில் நேற்று மாலை யூதர்களின் நிகழ்வு ஒன்றில் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. அதில் 16 பேர் உயிரிழந்துள்ளதோடு, சுமார் 40 பேர் காயமடைந்தனர்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டை இருவர் மேற்கொண்டுள்ளனர். அவர்களில் ஒருவர் சம்பவ இடத்திலேயே பொலிஸாரால் சுட்டுப் கொல்லப்பட்டார். மற்றொருவர் படுகாயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

துப்பாக்கிதாரி எனக் கூறப்படும் இவர்கள் இருவரும் பாகிஸ்தானைச் சேர்ந்த தந்தை மற்றும் மகன் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடற்கரைக்கு வெளியே உள்ள சிறிய பூங்கா ஒன்றில் நடைபெற்ற யூதர்களின் நிகழ்வில் சுமார் ஆயிரம் பேர் கலந்து கொண்டிருந்தனர் என்று ஆஸ்திரேலிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# தனது இரு பிள்ளைகளையும் மல்வத்து ஓயாவில் தள்ளிவிட்டு கொலை செய்த தாயாருக்கு மறியல்

அனுராதபுரத்தில் தனது இரண்டு பிள்ளைகளையும் மல்வத்து ஓயாவில் தள்ளிவிட்டு கொலை செய்த தாயாரை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு அனுராதபுரம் பிரதான நீதிவான் சியபத் சசிந்து விக்கிரமரத்ன உத்தரவிட்டுள்ளார்.

அனுராதபுரத்தில் 40 வயதுடைய தாய் ஒருவர், இம்மாதம் 2ஆம் திகதி அதிகாலை தனது 4 வயதுடைய மகள் மற்றும் 8 வயதுடைய மகனை மல்வத்து ஓயாவில் தள்ளினார்.

மல்வத்து ஓயாவில் தள்ளிவிடப்பட்ட இரண்டு பிள்ளைகளும் நீரில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் சில நாட்களின் பின்னர் அவர்களின் சடலங்கள் கரை ஒதுங்கின.

குடும்பத் தகராறு காரணமாக இந்தச் சம்பவம் இடம்பெற்றது என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சந்தேகநபரான தாயார் கைது செய்யப்பட்ட நிலையில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஒன்றாக
முன்னோக்கி

நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# நிபந்தனைகள் வரும்

புயல், பெருவெள்ளம், மண் சரிவு என்று மிக மோசமான இயற்கைப் பேரிடர்களை எதிர்கொண்டு, பேரனர்த்த நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்தபடி, பொருளாதார ரீதியில் தடுமாறும் நாட்டை ஜனாதிபதியும் அரசுத் தரப்பினரும் எவ்வாறு தூக்கி நிறுத்தி, மீண்டெழ வைக்கப் போகின்றார்கள் என்பது தொடர்பில் பல்வேறு ஊகங்கள், ஆலோசனைகள் கூறப்பட்டு வந்தன.

இப்போது அரசின் திட்டம் மெல்ல வெளிப்படத் தொடங்கி இருக்கின்றது.

பேரிடர் மீட்சிக்கு - நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கான உதவிகளை உலக நாடுகளிடம் இருந்து பெறுவதற்காக - சர்வதேச நன்கொடையாளர்கள் மாநாட்டை கூட்டும்படி பல தரப்புகளினாலும் முன்வைக்கப்பட்டு வந்த யோசனையை அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டைக் கூட்ட அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்ற தகவலை வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

உலக வங்கி மற்றும் தொடர்புடைய அரசு நிறுவனங்களால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் மதிப்பீடுகள் முடிந்த பின்னர் இந்த மாநாடு நடத்தப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

கடந்த மாத இறுதியில் ஏற்பட்ட பேரிடரில் இதுவரை 600க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ள நிலையில், பலர் காணாமல் போயுள்ளனர். மேலும், நெடுஞ்சாலைகள், ரயில் பாதைகள், மின் இணைப்புகள், நீர்ப்பாசனக் குளங்கள் மற்றும் கால்வாய்கள் மற்றும் கட்டடங்கள் உள்ளிட்ட உள்கட்டமைப்புகளுக்கு பெரும் சேதம் ஏற்பட்டிருக்கின்றது.

சுமார் ஆறு முதல் ஏழு பில்லியன் டொலர் வரையான சேதம் ஏற்பட்டுள்ளதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையர் மதிப்பிட்டுள்ளார்.

மீள்கட்டமைப்புக்கான நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்காக, அரசாங்கம் ஏற்கனவே இலங்கையை மீண்டும் கட்டியெழுப்பும் நிதியத்தை நிறுவியுள்ளது. அந்த நிதியத்திற்கு இதுவரை 3.4 பில்லியன் ரூபா நன்கொடையாக கிடைத்துள்ளது.

பேரிடரின் போது, இந்தியா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, பாகிஸ்தான், ரஷ்யா, சீனா, ஐக்கிய இராச்சியம், மாலைத்தீவுகள், பங்களாதேஷ் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் உதவிகளை வழங்கியிருந்தன.

இந்நிலையில், சர்வதேச கொடையாளர் மாநாட்டை நடத்துவதற்குரிய ஏற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயினும், சர்வதேச நன்கொடையாளர்கள் கண்ணை மூடிக்கொண்டு நிதி உதவி அளிக்க மாட்டார்கள்.

மனித உரிமைகள், சிறுவர் உரிமைகள், தொழிலாளர் நலன், சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்ற பல சர்வதேச கவனத்துக்குரிய விடயங்களில் சர்வதேச நியமங்களைப் பின்பற்றுவதை இலங்கைக்கு நிபந்தனையாக முன்வைத்துத்தான் இத்தகைய உதவிகளை அவை வழங்க முற்படும்.

2003 - 2004 ஆம் ஆண்டில் இவ்வாறு சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டை அப்போதைய பிரதமர் ரணிலின் அரசு கூட்டிய போது கூட, பெருந்தொகை நிதியை உதவ முன்வந்த உலக சமுதாயம், தேசிய இனப் பிரச்சினைக்கு நின்று, நிலைத்து, நீடிக்கக் கூடிய - நீதி, நியாயமான - இனங்களின் தனித்துவங்களை உறுதிப்படுத்துகின்ற - கௌரவமான - இணக்கத் தீர்வைக் காண வேண்டும் என்பதை ஒரு நிபந்தனையாக முன் வைத்திருந்தது.

இப்போதும் கூட சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டில் இருந்து அது போன்ற பல நிபந்தனைகளை அநுரா அரசு எதிர்கொள்ள வேண்டி இருக்கும் என்பது தவிர்க்க முடியாத கட்டாயமாக அமையும்.



# அனர்த்தத்தின் பின்னரான மக்களின் வாழ்வியல் மீண்டெழுவது எப்போது?

**சி. சிவலஷ்சுமி,**
**(இரண்டாம் வருடம்,**
**ஊடகக்கற்கைகள் துறை,**
**யாழ். பல்கலைக்கழகம்.)**

அவ்வளவு சாதாரணமாக மறந்து விட முடியுமா? அனர்த்தம் முடிவடைந்தாலும் அதன் தாக்கம் ஆறாதவடுவாய் இன்றும் மக்கள் மனதில் உள்ளது. நாடு பூராகவும் 'டித்வா' புயலும் அதன் பின்னரான தாக்கங்களுமே பேசு பொருளாகக் காணப்படுகின்றது. வீடு, சொத்துக்கள், உடமைகள் போன்று அனைத்தையும் இழந்து அநாதரவாகக் காணப்படுகின்ற மக்களுக்கு இவற்றின் தாக்கத்திலிருந்து எப்போதும் மறுவாழ்வு கிடைக்கப்போகிறது?

குறிப்பாக இவ் அனர்த்தத்தின் இழப்புக்கள் மற்றும் அவலங்கள் குறித்த மக்களின் விரக்தியான மனநிலையில் இருந்து அவர்களை வெளியில் கொண்டுவருவது கடினமான ஒன்றே. காரணம் அனர்த்தத்தின் போதும் அதற்குப் பின்னரும் மக்கள் இழந்தவை அதிகம்.

குறிப்பாக வீடுகள் அழிவடைந்தமை, அதிக வெள்ளத்தால் வீடுகளுக்குள் வெள்ளநீர் புகுந்தமையும், மண்சரிவுகளின் போது வீடுகள் முற்றாக சேதமடைந்து அங்கு வாழும் மக்கள் தமது இருப்பிடங்களை இழந்து தற்காலிக முகாம்களிலும், பாடசாலைகளிலும் தங்க வைக்கப்பட்டிருக்கின்றனர். இதில் அதிகம் பாதிக்கப்பட்டவர்களாக முதியவர்களும், சிறுவர்களுமே காணப்படுகின்றனர். இவ்வாறாக தமது இருப்பிடங்களை இழந்து தவிக்கும் மக்களுக்கு அவர்களுக்கு வேண்டிய இருப்பிட உதவிகளை அரசாலும், தன்னார்வலர்களாலுமே செய்யமுடியும்.

மேலும் அனர்த்த சூழ்நிலையில் மக்கள் உணவைப் பெற்றுக் கொள்வதில் எதிர்நோக்கிய சவால்கள், மாணவர்கள் தமது கற்றலைத் தொடர்வதில் எதிர்நோக்கும் சிக்கல்கள், இவ் அர்த்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலப் பகுதியில் நாட்டில் கல்வி பொதுத்தராதர உயர் தரபரீட்சைகள்நடைபெற்றுக்கொண்டிருந்தன. ஆனால் தற்போது அவை அனைத்தும் பிற்போடப்பட்டிருக்கின்றன. இது மாணவர்களது கல்வியை பாதித்த ஒரு விடயமாக காணப்படுவதோடு மட்டுமன்றி ஏனைய மாணவர்களும் அனர்த்தத்தின் மூலம் தமது பாட நூல்களையும் பெறுமதியான ஆவணங்களையும் இழந்திருப்பது வருத்தத்துக்கு உரிய ஒன்றே. இதேபோன்று தினசரி வேலைக்குச் சென்று அன்றாடம் பெற்றுக் கொள்ளும் வருமானத்தில் இருந்து தமது வாழ்க்கை செலவுகளை பார்க்கும் நபர்களும் இந்த சீரற்ற காலநிலையால் தமது வேலைகளை இழந்து தமது குடும்பத்தை நடத்துவதற்கு உரிய வருமானத்தை தொலைத்திருப்பதும் பாரிய இழப்பாகும்.

மேலும் இவை அனைத்தையும் விட மக்கள் அதிகமாக மன உளைச்சலால் பாதிக்கப்பட்டிருக்கின்றமையும் இனங்கான கூடிய ஒரு விடயமாகவே காணப்படுகின்றது. ஏனெனில் தமது கண்ணுக்கு முன்னால் தங்களது சொத்துக்கள், உடமைகள், ஆவணங்கள் என்பன அழிவடைவதை யாராலும் ஏற்றுக் கொள்ள முடியாது. அத்தோடு சிறுவர்கள் இவ்வாறான ஒரு அனர்த்தத்தை தமது வாழ்நாளில் கண்டிருக்க மாட்டார்கள். அதனால் இந்த கோர அனர்த்தத்தை மறப்பதென்பது அவர்களுக்கு சாத்தியமான ஒன்றல்ல. மேலும் குடும்பத்தின் மூத்த உறுப்பினர்கள் தங்களால் எதுவும் செய்ய முடியவில்லையே என்ற இயலாமையில் அதிகமாக மன உளைச்சல்களுக்கு உள்ளாகி இருக்கின்றனர். இவ் மன அழுத்தம் நாளடைவில் அவர்களது உடலையும் பாதிக்கும் நோய் நிலைமைகளை உண்டாக்கி விடும்.

ஆகையால் தற்போதைய சூழ்நிலையில் அவர்களுக்கு தேவைப்படுவது மன ரீதியான ஆறுதலே. மேலும் தொற்று நோய்கள் ஏற்படுவதற்கான அபாயமும் இயற்கை அனைத்துத்தின் பின்னர் அதிகமாக காணப்படுகின்றது. வெள்ளநீர் தேங்கி நுளம்புகள் பெருகும் அபாயம், கழிவு நீர் குடிநீரோடு கலத்தல், கழிவறைகளில் வெள்ள நீர்புகுவதால் மக்கள் எதிர்நோக்குகின்ற சவால்கள் இவை அனைத்தும் அதிகளவான நோய் நிலமைகளை இந்தக் காலப் பகுதியில் ஏற்படுத்துகின்றது.

இவ்வாறாக அனர்த்தத்தின் போதும், அதன் பின்னரான காலப் பகுதியிலும் மக்கள் உளரீதியாகவும், உடல் ரீதியாகவும், பௌதிக வளங்கள் சேதமடைவதாலும் பல்வேறு இன்னல்களை எதிர் நோக்கிய வண்ணமே உள்ளனர்.

இவற்றிலிருந்து அவர்களை வெளியில் கொண்டு வருவதற்கு நிதி உதவிகள், நிவாரணங்கள் வழங்குவதோடு மட்டும் நின்று விடாது உளவள ஆலோசனைகளையும் வழங்க வேண்டும். நாம் ஒன்றிணைந்தால் மாத்திரமே அனர்த்தத்தின் பாதிப்பில் இருந்து நாட்டையும் நாட்டு மக்களையும் வெளிக்கொண்டு வரமுடியும்.



# கொடுப்பனவும் மனப்பாங்கும்!

லி.கருனிகா
ஊடகக்கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.)

இலங்கை நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட தீவு என்பது 'டித்வா' புயலால் நாடே தீவானகதையாய் போய்விட்டது. அண்மையில் இடம்பெற்ற இயற்கை அனர்த்தம் என்பது இலங்கையைப் பொறுத்தமட்டில் வரலாறு காணாத ஒன்றாகக் காணப்பட்டது.

டித்வா சூறாவளியால் இலங்கையின் வடக்கு, வடமேற்கு, மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. குறிப்பாக கண்டி, நுவரெலியா, பதுளை, குருநாகல் போன்ற மாவட்டங்களில் அதிக சேதமும், உயிரிழப்புகளும் ஏற்பட்டிருந்தன. மேலும் நாட்டின் 25 மாவட்டங்களிலும் இதன் தாக்கம் உணரப்பட்டது. வெள்ளம், நிலச்சரிவு, பலத்த காற்று மற்றும் கனமழை காரணமாக பெரும் பாதிப்புகள் ஏற்பட்டன.

குறிப்பாக மலையக பகுதிகளில் அதீத பாதிப்பை கொடுத்தது. மண்சரிவுகள் ஏராளமாக இடம்பெற்றிருந்தது. இயற்கை உயிர்காவும் செய்ததோடு கனவுகளாய் கட்டப்பட்ட வீடுகள் மண்ணோடு புதைந்தன. உடமைகள் அழிக்கப்பட்டன.

இன்றுவரை மண்சரிவுகளில் இருந்து உடல்கள் மீட்கப்பட்ட வண்ணமே உள்ளது. இயற்கை தந்த வலிகள் இன்றும் நிலவிய வண்ணமே இருக்கிறது. இதனால் உலக நாடுகள் உதவிக் கரங்களை நீட்டியிருந்தன. உலக நாடுகள் தந்த உதவி கொடுப்பனவுகள் இழப்புக்கு உள்ளாகினோருக்கு அரசால் ஒதுக்கப்பட அதனையும் தட்டிச்செல்ல சிலர் தவிக்கிறார்கள்.

கனவுகளாக கட்டப்பட்ட வீடுகள் அழிந்தவர்களுக்கும் கால் அளவு வெள்ளம் வந்தவர்களுக்கும் ஒரே அளவு கொடுப்பனவை எதிர்பார்க்கும் மக்களாய் இன்று சிலர் செயற்படுகிறார்கள். அன்றாட வேலைக்குச் சென்று தமது வாழ்க்கையை நடத்திய மக்களது வாழ்வு இன்று கேள்விக்குறியானது.

நாட்டில் பருவகால மழை வருடா வருடம் வெள்ளப் பெருக்கை ஏற்படுத்தும் அப்போதும் உதவிக் கரங்கள் நீட்டப்பட்ட வண்ணமும் நிவாரணப் பொதிகள் வழங்கப்பட்ட வண்ணமே இருந்தது. ஆனால் அண்மையில் இடம்பெற்ற டிட்வா புயலில் பாரிய இழப்பீட்டை இலங்கை சந்தித்ததால் உலக நாடுகள் தமது கரங்களை நீட்டி இருந்தார்கள். அத்தொகையை அரசு சமனாகப் பிரித்து ஒவ்வொரு பகுதிகளாக ஒதுக்கீடு செய்தது. அதனை உண்மையிலேயே பாதிக்கப்பட்ட மக்களுக்கு பிரித்துக் கொடுப்பது ஒரு சமுதாய செயலாக காணப்படும். ஆனால் வருடா வருடம் இடம்பெறுகின்ற பருவ கால மழை வெள்ளப் பெருக்கைப் போல கால் அளவு தண்ணி வந்தவர்களும் கொடுப்பனவை பெற்றுக்கொண்டு திருப்தியடைய நினைப்பது சிறந்ததல்ல.

நிவாரண உதவி திட்டமானது இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி தேவைகளை நிறைவு செய்வதற்காகவே வழங்கப்பட்ட ஒன்றாகவே காணப்படுகிறது. 25 ஆயிரம் ரூபா என்பது மக்களது தேவையை நிமர்த்தி செய்யும் முகமாக அரசால் வழங்கப்பட்ட ஒரு தொகை. ஆனால் அதை சுருட்டிக் கொள்ளும் மக்களாக சிலர் செயல்படுவது மனிதாபிமானமற்ற செயற்பாடாகவே விளங்குகிறது.

எங்கள் சகோதர சகோதரியே நிர்கதியாய் நிற்கிறார்கள் என் உறவே அங்கு காவுகொள்ளப்பட்டிருக்கிறது என மனதில் வைத்துக் கொண்டு அங்கு உணவுக்கு தவிக்கும் பச்சிளம் குழந்தைகள், மக்கள் மத்தியில் அப்பணம் சென்றடைய வேண்டும் என மனிதாபிமானத்தோடு செயற்பட்டு எமக்குத் தேவையான உதவிகளை மாத்திரம் பெற்று மேலதிக தொகையை சுருட்டி கொள்வதில் முன்வராமல் தாமும் சேர்ந்து உதவிகளை செய்வோராக சமுதாயத்தில் அல்லது நாட்டில் செயற்பட்டு எம் மக்கள் எம் நாடு என்று வாழ்வோமாயின் நாம் முன்னேற்றம் அடைவோம்.



# மறைந்துபோன பாரம்பரிய உணவுகள் பழகிக் கொண்ட மேலைத்தேய உணவு!

ச. அஷ்விதா,
(ஊடகக்கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்)

பழமையில் பேசப்பட வேண்டிய சுவாரஸ்யமான விடயங்களில் எமது மூதாதையர்களின் பாரம்பரிய உணவு பழக்க வழக்கங்கள் ஆகும்.


பழமையான காலங்களில் நம் முன்னோர்கள் பின்பற்றிய உணவு முறைகள் சுகாதாரத்துக்கும், ஆரோக்கியத்துக்கும் மிகவும் முக்கியமாக இருந்தன. துருவல், உலர்த்தல், நன்கு வேகவைத்தல், இயற்கை மூலிகைகளை பயன்படுத்தல் இன்று அவர்களின் உணவுப் பழக்க வழக்க முறையானது இயற்கையாகவே அந்த உணவுக்கு சுவை சேர்ப்பதாக அமைந்திருந்தது. உணவின் சுவைக்கு அப்பால், உணவின் ஊட்டச்சத்துக்களையும், நிலைத்தன்மையையும் அவர்களுடைய உணவு பழக்க வழக்கங்கள் பேணிப் பாதுகாத்து வந்தன.

காலை உணவாக தானிய வகைகள், இட்லி, தோசை எனச் சத்து நிறைந்த உணவுகளும், பகல் நேரத்தில் சோறு, இயற்கை மரக்கறிகள் என ஆரோக்கியமான உணவுகளும் மற்றும் இரவு உணவாக கஞ்சி, இடியாப்பம், புட்டு போன்ற எளிமையான உணவுகளையுமே தமது உணவு பழக்கவழக்கத்தில் முக்கியப்படுத்திக்கொண்டு, மிகையான ஆரோக்கியத்தோடும் நீண்ட ஆயுளோடும் வாழ்ந்து வந்தனர் அது மட்டும் அல்லாமல் எனது மூதாதையர்களால் தயாரிக்கப்படும் ஒவ்வொரு உணவுகளுமே இந்த ஒரு செயற்கையான சுவையூட்டிகளும், உப்பு, சக்கரை, எண்ணெய் என எதுவும் அதிகம் இல்லாமல் அவர்களின் கைகளால் தயாரிக்கப்பட்டு உட்கொண்ட பாரம்பரிய உணவு முறைகளே வழக்கத்தில் இருந்தன.

இவ்வாறான, பாரம்பரிய உணவு பழக்க வழக்க முறைகள் இன்று எந்த அளவுக்கு எமது வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்திருக்கின்றது என்பது ஒவ்வொருவரும் மத்தியிலும் கேள்விக்குறியாகவே இருக்கின்றது. காரணம் இன்றைய நவீன காலத்தின் வேகமான ஓட்டத்தில் மேற்கேத்தேய கலாசாரமானது எமது வாழ்க்கையின் பாணியை தலைகீழாகப் புரட்டிவிட்டது. அதில் கலாசாரம், உடை மற்றும் நடத்தை மாற்றம் மட்டுமல்லாமல், உணவு பழக்க வழக்கங்களிலும் பாரிய அளவான தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கின்றது. இன்று எமது தலைமுறையினர் அதிகம் விரும்பி உண்ணும் உணவுகளாக இந்த மேற்கேதேய உணவுகளே எம்மை சூழ்ந்து வளம் வந்து கொண்டிருக்கின்றன.

வேகமாக தயாராகும் ‘ஜங்க் புட்’ உணவுகள், செயற்கை சுவையூட்டல்கள் அதிகம் பயன்படுத்தி தயாராகும் பீட்சா, பேர்கர், குளிர் பானங்கள் போன்றவையே எங்கும் பரவலாக காணப்படுகின்றன. தெருக்களுக்கு தெரு இன்று பீட்சா அட்களும், KFC நிலையங்களும் ஊக்குவிக்கப்பட்டு வருவதனை நாம் காணக்கூடியதாக இருக்கும் இவ்வாறான மேற்கேதேய உணவு முறைகள் எமது நாட்டில் பிரபல்யமாவதற்கான காரணம் நாம் அனைவரும் அதனை விரும்பி உண்பதேயாகும். இந்த உணவு முறையே, இளைய தலைமுறையின் அன்றாட உணவாக மாறியுள்ளன. இதில் எண்ணெய், சர்க்கரை மற்றும் உப்பு அளவு அதிகம் இருப்பதால், இதய நோய்கள், உடல் பருமன், நீரிழிவு போன்ற நோய்கள் அதிகரித்து வருகின்றன. இவ்வாறான, பாதிப்புக்குள் எதனையும் பொருட்படுத்தாமல் எமது முன்னோர்களின் ஆரோக்கியமான உணவு பழக்க வழக்கங்களை மறந்து நாம் இன்னொருவரின் உணவு பழக்க வழக்க முறைகளையே விரும்பி உண்பதற்குப் பழகிவிட்டோம், உணவில் உள்ள ஆரோக்கியத்தை மறுத்து சுவையூட்டல்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து இன்று எம் உடலை நாமே வருத்திக் கொள்கின்றோம்.

இவ்வாறு பாரம்பரிய உணவு முறைகள் மறைந்து, மேல் தேய உணவுகள் வளர்ந்துவருவது நம் உடல் நலத்துக்கு ஆபத்தாகும். எனவே, நாம் பழைய பாரம்பரிய உணவுகளை மீண்டும் அறிந்து, அவற்றை நம்மை நோக்கி கொண்டு வரும் முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.



# 19ஆம் நூற்றாண்டில் ஈழத்தில் தோன்றிய செய்யுள் இலக்கிய மரபு ஒரு பார்வை!



அம்சன் கிருஸ்ணா
(3ஆவது வருடம்,
ஊடகக்கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்)

ஒரு மொழிக்கூட்டத்தினரது வரலாற்றை அவர்களது இலக்கியத்தின் வழியாகப் பார்க்கும் பயிற்றுறையே 'இலக்கிய வரலாறு' என்ற பெயர் கொண்டு குறிப்பர். தமிழில் இலக்கிய வரலாறு பயிற்றுறை பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப் பகுதிகளுக்குப் பின்னர்தான் எழுகின்றது. அதன் போதுதான் தமிழ் இலக்கிய வரலாற்றை, தமிழ் இலக்கிய வளர்ச்சிக் காலகட்டங்களைப் பகுப்பாய்வு செய்யும் முயற்சிகள் ஆரம்பமாகின. அந்தவகையில் தமிழ் இலக்கிய வளர்ச்சிக் கட்டங்களைப் பல்வேறு தமிழ் அறிஞர்கள், பல்வேறு தமிழ்ப் பேராசிரியர்கள் பல்வேறுவிதமாகக் கட்டமைத்துள்ளனர். இருப்பினும் அனைவரது கால வகுப்பிலும் பொதுமையாகக் காணப்படுவது 19ஆம் நூற்றாண்டை ஈழத்துக்குரியதாகக் காட்டுதலே ஆகும்.

19 ஆம் நூற்றாண்டு ஈழத்துக்குரியதே என்று வாதாடும் அளவுக்கு ஆதாரமாய் அமையும் காரணிகளும் மிக முக்கியமானவையாக அமைவன மூன்று. அவையாவன,

ஈழத்தில் நடைபெற்ற பதிப்புப்பணி முயற்சிகள்.

ஈழத்தமிழ்ப் பேராசிரியர்களின் தமிழ்ப்பணி.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஈழத்திலே எழுந்த இலக்கியங்கள்.

அந்தவகையிலே பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஈழத்திலே எழுந்த இலக்கியங்களை நோக்கினால் அந்த இலக்கியம் எழுந்த அரசியல், சமூகப் பொருளாதார, பண்பாட்டுப் பின்னணிகளை எமக்குப் படம் போட்டுக் காட்டும். பத்தொன்பதாம் நூற்றாண்டு என்பதுகீழைத் தேசத்தின் பெரும்பாலான தேசங்கள் காலனித்துவ அனுபவத்துக்கு உட்பட்ட காலமாகும். மேலைத் தேயவரின் வருகையால் இங்கு ஏற்பட்ட கல்விப் பாரம்பரிய மாற்றம் இங்கு எழுந்த இலக்கியங்களின் குணாம்சங்களிலும் மாற்றத்தை ஏற்படுத்தியிருப்பதனை எம்மாற் அறிந்து கொள்ள முடிகின்றது. பல்வேறு மாற்றங்கள் இலக்கியப் பரப்பிலே இடம்பெற்று இருந்தன. அவற்றில் சிலவற்றை அட்டவணைப்படுத்தினால்,

1 ) ஒப்பீட்டளவில் அதிகளவான இலக்கியப் பெருக்கம்.

2) உரைநடை இலக்கியத்தின் வளர்ச்சி.

3) மரபு, மரபு சாரா என்ற இலக்கிய வகைப்பாடு.

4) சமயச் சார்புத் தன்மை

5) பொதுமக்கள் இலக்கிய வடிவம்.

இலக்கியப் பரப்பிலே இவ்வாறான மாற்றங்கள் ஏற்படுவதற்குக் காரணமாய் அமைந்தவை மேற்கத்தேயவர்களின் வருகையும், அவர்களின் வருகையால் இங்கு ஏற்பட்ட சமூகப் பொருளாதார, அரசியல் மாற்றங்களுமே ஆகும். இந்தக் காலத்தில் ஏற்பட்ட இலக்கியப் பெருக்கத்துக்கான காரணம் ஏலவே குறிப்பிட்ட மேலைத் தேயவரின் வருகையோடு அறிமுகமாகிய அச்சியந்திரத்தின் பயன்பாடும் பத்திரிகையின் வருகையும் உந்து சக்தியாக அமைந்தன என்பதை மறுப்பதற்கில்லை.

தொடர்ச்சி ▼

# 19ஆம் நூற்றாண்டில் ஈழத்தில் தோன்றிய செய்யுள் இலக்கிய மரபு ஒரு பார்வை!

தொடர்ச்சி▲

**19 ஆம் நூற்றாண்டில் ஈழத்தில் தோன்றிய செய்யுள் இலக்கிய மரபு**

மேலைத் தேயவரின் வருகையாலும் அச்சியந்திரத்தின் அறிமுகத்தாலும் உரைநடை இலக்கியங்கள் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்த பத்தொன்பதாம் நூற்றாண்டு காலப் பகுதியிலும் மரபை அடிப்படையாகக் கொண்ட செய்யுள் இலக்கியங்களும் ஈழத்தில் தோன்றி இருக்கின்றதை நாம் அவதானிக்க வேண்டும். மரபு இலக்கியங்கள் என்னும் வகையிலே புராணங்கள், தூது, அம்மானை, பிள்ளைத் தமிழ், நான்மணிமாலைமும்மணிக் கோவை, பள்ளு, குறவஞ்சி, ஊஞ்சல் முதலான இலக்கிய வடிவங்களைக் குறிப்பிடலாம். இவை முன்னோர் வகுத்த யாப்பு, அணி மரபுகள் பிறழாமல் பெரும்பாலும் உள்ளடக்கத்திலும் மாற்றம் இல்லாமலும், சில இலக்கியங்கள் சில உள்ளடக்க மாற்றங்களைத் தன்னுள் ஏற்றுக்கொண்டும் இக்காலப் பகுதியில் தோன்றியுள்ளன. இக்காலப் பகுதியில் தோன்றிய செய்யுள் மரபு இலக்கியங்களை நோக்கும்போது பெரும்பாலானவை இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமியச் சமயச் சார்புடையனவாகவே காணப்படுகின்றன.

ஒரு சிலவனவே சமயம் சாராத அகப்பொருள் துறைசார்ந்த, தனிமனித முதன்மைப்படுத்தலுக்கும், தனிமனித உணர்வு வெளிப்பாட்டிற்கும் அமைந்தனவாக எழுந்தன. இவ்வாறு பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஈழத்திலே எழுந்த செய்யுள் மரபு இலக்கியங்களிற் பெரும்பாலானவையாக அமைந்த சமயச் சார்பு இலக்கியங்களிற் பல தத்துவம், பக்தி, நம்பிக்கை, வழிபாடு மற்றும் தலச் சிறப்பை விதந்து பாடுபவைகளாகவே காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது. அவற்றிலும் மிக முக்கியமாக தலச் சிறப்பை விதந்துரைக்கும் இலக்கியங்களே எண்ணிக்கையளவில் அதிகமெனலாம்.

இவ்வாறு தலங்கள் மீதான இலக்கியங்கள் பெருவாரியாகத் தோன்றியமைக்கு இரண்டு பெருங் காரணங்களைப் பட்டியலிட முடியும். அவ்விரண்டும்,

1) மேலைத்தேயவரின் வருகையால் ஏற்பட்ட வேற்று மத (கிறிஸ்தவ) மோகம், மத மாற்றத்தைத் தடுக்கும் வண்ணம் சுதேச மதத் (இந்து) தலங்களின் பெருமைகளை, அத்தலத்தில் வீற்றிருக்கும் இறைவனின் அற்புதங்களைப் பாடி அவற்றைப் பிரச்சார ஊடகமாகப் பயன்படுத்தல்.

2) அக்காலச் சமூகத்திலே கல்விப் புலமை ஏற்படுத்திய சமூக மாற்றத்தினால் இலக்கியங்களைப் படைக்கக் கூடிய தமிழ்ப் புலமையாளர்களின் பெருக்கம்.

நீங்கள் வழங்கிய கவிதை வடிவிலான தமிழ் எழுத்துருவில் (Grantha/Archaic Tamil script) உள்ள பந்தியின் சொற்கள் இங்கே எளிமையான தமிழில் கொடுக்கப்பட்டுள்ளன. இது 19 ஆம் நூற்றாண்டு ஈழத்துச் செய்யுள் இலக்கியப் பெருக்கத்துக்கான காரணங்களையும், சமய அடிப்படையிலான இலக்கியங்களின் உதாரணங்களையும் மேலும் விளக்குகிறது. ஈழத்துச் செய்யுள் இலக்கியப் பெருக்கம் மற்றும் உதாரணங்கள்

இவ்வேறு காரணமே இவ்விலக்கியப் பெருக்கத்துக்குக் காரணம் எனலாம். உதாரணமாகப் பார்த்தால் யாழ்ப்பாணப் பிரதேசத்திலே ஊஞ்சல் அல்லது பதிகம் அல்லது மணிமாலை என்னும் ஒரு இலக்கியமேனும் பாடப்படாத கோவில்களே இல்லை எனலாம். தத்தமது ஊரிலுள்ள தலத்தின் சிறப்பை இலக்கியமாகப் பாட வேண்டிய நிர்ப்பந்தமும் அந்த நிர்ப்பந்தத்தைத் தீர்க்கக்கூடியளவில் காணப்பட்ட விரிந்த தமிழ்ப் புலமைப் பரப்பின் விளைவாகவே இதனை கருத முடியும்.

சமய உட்பொருள்களைக் கொண்டே எழுந்த இலக்கியங்களுக்கு உதாரணமாக,

1) சைவ சமயம் - இளசைப் புராணம், நகுல மலைக் குறவஞ்சி, நல்லூர்க் கந்தசுவாமி கிள்ளைவிடு தூது, செல்வச்சந்நிதி பிள்ளைத் தமிழ், மறைசைக் கலம்பகம்.

2) கத்தோலிக்கம்- தொன்பிலீப் எழுதிய ஞானானந்த புராணம்.

3) புரட்டஸ்தாந்து- அளவெட்டி வே. கனகசபைப் புலவர் எழுதிய திருவாக்குப் புராணம்.

4) இஸ்லாம்- பதிருத்தீன் புலவர் எழுதிய முஹ்யித்தீன் புராணம், அசனா லெப்பைப் புலவர் எழுதிய நவரத்தினத் திருப்புகழ், முஹ்யித்தீனாண்டகை பேரில் ஆசிரிய விருத்தம், சாகுல் ஹமீது ஆண்டகைய வர்களின் பேரில் முனாயாத்து, அப்துர் ரஹ்மான் எழுதிய சரண்தீவு மாலை, ஞான அதீதாக்கும்மி, நாச்சியார் மாலை, அருளவாக்கி அப்துல் காதிறுப் புலவர் படைத்த சந்தத் திருப்புகழ் போன்றவற்றைப் பட்டியலிட்டுக் காட்ட முடியும்.

அதேபோன்று அக்காலத்தில் தனிமனிதர்களை மிக முக்கியமாக நிலப் பிரபுக்களைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டும் அவர்களது புகழைப் பெருமையைப் பாடுபொருளாகக் கொண்டும் எழுந்த செய்யுள் இலக்கிய வடிவங்களையும் அவதானிக்க முடிகின்றது.

உதாரணமாக உடுப்பிட்டிக் குமாரசுவாமி முதலியாரின் அருளம்பலக் கோவை மற்றும் வள்ளை க. குமாரசுவாமி முதலியாரால் பாடப்பட்ட கலித்துறை ஒன்றை வகைமாதிரிக்குக் காட்ட முடியும்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஈழத்திலே எழுந்த இலக்கியங்களின் பொதுமையான இயல்புகளை நோக்கும்போது முதலில் கடுமையான மரபுகளை இறுக்கமாகக் கைக் கொண்ட போக்கையும், பின் புதுமைகளை வரவேற்றுத் தமிழ்ச் செய்யுள் மெல்ல மெல்ல எளிமையை நோக்கி நகரத் தொடங்கியதையும் அக்காலத்திலே தோன்றிய சில படைப்புக்கள் எமக்கு உணர்த்துகின்றன.

ஆரம்பகாலச் செய்யுள் அமைப்புக்கு க. மயில வாகனப் புலவர் மற்றும் முருகேச பண்டிதர் போன்றோர் பாடிய சொல்லணி உத்திகள், யாப்பு இறுக்கங்கள் கைக்கொள்ளப்பட்ட இலக்கியங்களை அவதானிக்க முடியும்.

அதேபோன்று பின்னர் புதுமைகளை வரவேற்றுத் தமிழ்ச் செய்யுள் மெல்ல மெல்ல எளிமையை நோக்கி நகரத் தொடங்கியதைக் காட்டும் முகமாக மரபு ரீதியான சில இலக்கிய வடிவங்கள் ஊடாகப் புதுமை நாட்டமும், சமகாலச் சிந்தனை உணர்வும் கொண்ட புலவர்கள் சிலர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் இருந்து புதுவகை இலக்கியங்களைப் படைக்க முற்பட்டனர். இவர்களுக்கு உதாரணமாக வரகவி சுன்னாகம் முத்துக் குமார கவிராசர் மற்றும் உடுப்பிட்டிக் குமாரசுவாமி முதலியார் போன்றோரைக் குறிப்பிட முடியும்.

இவர்கள் காலத்தின் தேவைக்கேற்ப அந்நியர்

தொடர்ச்சி▼

# 19ஆம் நூற்றாண்டில் ஈழத்தில் தோன்றிய செய்யுள் இலக்கிய மரபு ஒரு பார்வை!

தொடர்ச்சி▲

ஆட்சியில் ஏற்பட்ட சமூக, கலாசார முரண்பாடுகளை எளிமையான முறையில் பாடியுள்ளனர். மிக முக்கியமாக 1866-67 காலப்பகுதிகளில் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் இடம்பெற்ற கொடும் பஞ்சம் குறித்தும், கொள்ளை நோயால் இறந்த மக்களின் பரிதாப நிலை குறித்தும் சமூகத்தைப் பற்றிய சிந்தனை உணர்வுகளை எளிமையான முறையில் மக்களிடம் கொண்டு சேர்க்கும் நோக்கோடு பாடப்பட்டு இருப்பதை எடுத்துக் காட்டுகின்றது . அதே போன்று சில புலவர்கள் புராணம் போன்ற பழைய இலக்கிய வடிவங்களுக்குப் புதிய பொருளை அமைத்துச் செய்யுள் இலக்கிய வரலாற்றில் புதிய பரிமாணங்களை ஏற்படுத்தியிருக்கின்றனர். உதாரணமாகக் கனகி புராணம் பாடிய சுப்பையனார், தலபுராணம் பாடிய அச்சுவேலி நீ. காசிநாதப்புலவர், கோட்டுப் புராணம் பாடிய கோப்பாய் வே. இராமலிங்கம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஈழத்தில் தோன்றிய செய்யுள் இலக்கிய மரபுகளை நோக்கும்போது பெரும்பாலும் சமயச் சார்புடையனவாகவே காணப்படுகின்றன. ஒரு சிலவனவே சமயம் சாராத அகப்பொருள் துறை சார்ந்த, தனிமனித முதன்மைப்படுத்தலுக்கும், தனிமனித உணர்வு வெளிப்பாட்டுக்கும் அமைந்தனவாக எழுந்துள்ளன. அவற்றிலும் மிக முக்கியமாக தலச் சிறப்பை விதந்துரைக்கும் இலக்கியங்களே எண்ணிக்கையளவில் அதிகமெனலாம்.

அதற்கு மேலைத் தேயவரின் வருகையும் அதனால் இங்கு ஏற்பட்ட சமய, சமூக, கலாசார மாற்றங்களினால் தத்தமது ஊரிலுள்ள தலத்தின் சிறப்பை இலக்கியமாகப் பாட வேண்டிய நிர்ப்பந்தமும் அந்த நிர்ப்பந்தத்தைத் தீர்க்கக்கூடியளவில் காணப்பட்ட விரிந்த தமிழ்ப் புலமைப் பரப்பின் விளைவுமே அடிப்படையாக அமைந்தன.

அத்தோடு அக்கால இலக்கியங்களின் அமைப்பு ரீதியான கண்ணோட்டத்தில் பார்க்கும்போது பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஈழத்தில் எழுந்த இலக்கியங்களின் பொதுமையான இயல்புகளை நோக்கும்போது முதலில் கடுமையான மரபுகளை இறுக்கமாகக் கைக்கொண்ட போக்கையும், பின் புதுமைகளை வரவேற்றுத் தமிழ்ச் செய்யுள் மெல்ல மெல்ல எளிமையை நோக்கி நகரத் தொடங்கியதையும் அக்காலத்திலே தோன்றிய சில படைப்புக்கள் எமக்கு உணர்த்துகின்றன.

இவை பின்வந்த புதுமை நாட்டமும், சமூக நோக்கமும் கொண்ட புலவர்களுக்கு ஆதர்சனமாக விளங்கின என்பது மட்டுமல்லாமல், செய்யுள் இலக்கிய அமைப்பில் இருந்த இறுக்கப்பாட்டை உடைத்து நெகிழ்ச்சித்தன்மையை உருவாக்கிப் பத்தொன்பதாம் நூற்றாண்டு ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு வழிசமைத்தன எனலாம்.





# வாழ்வாதாரப் பாதிப்பை எதிர்நோக்கும் முத்துஐயன்கட்டுகுளம் நன்னீர் மீனவர்!

## பாதிப்பு நிலமைகளை நேரில் சென்று ஆராய்ந்தார் ரவிகரன் எம்.பி.

**(விஜயரத்தினம் சரவணன்)**

அண்மைக் காலத்தில் ஏற்பட்ட சீரற்ற வானிலையால் முல்லைத்தீவு – ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட முத்துஐயன்கட்டுகுளம் நன்னீர் கிராமிய மீனவர் அமைப்பின் அங்கத்துவக் குடும்பங்களின் வாழ்வாதாரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ள நன்னீர் மீன்பிடியாளர்களுக்கு இதுவரை இழப்பீடுகளோ நிவாரணங்களோ வழங்கப்படவில்லை என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனிடம் முறையிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் முத்து ஐயன்கட்டு குளம் நன்னீர் கிராமிய அமைப்பின் முறையீட்டை அடுத்து, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், நன்னீர் மீன்பிடியாளர்களின் பாதிப்பு நிலைமைகள் தொடர்பில் நேரில் சென்று ஆராய்ந்தார். குறித்த நன்னீர் மீனவ அமைப்பினரிடம் இருந்து கோரிக்கைக் கடிதங்களைப் பெற்றுக் கெண்டார். அத்தோடு மீனவர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பில் தம்மால் கவனம் செலுத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

அண்மையில் நிலவிய சீரற்ற வானிலையால் முத்துஐயன்கட்டு குளத்தின் கரையில் பாதுகாப்பாக கட்டிவைக்கப்பட்டிருந்த, முத்துஐயன் கட்டுக்குளம் நன்னீர் கிராமிய மீனவர் அமைப்புக்கு உரிய 15 சிறிய படகுகள் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. மீன்பிடி வலைகள் குளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன என்று இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டிருந்தது.

அதேவேளை முத்துஐயன்கட்டு குளத்தின் நீர்மட்டம் உயர்வடைந்ததை அடுத்து வான்கதவுகள் திறக்கப்பட்ட நிலையில், குளத்தில் விடப்பட்டிருந்த மீன் குஞ்சுகள் மற்றும் பெரிய மீன்கள் என்பன வான் கதவுகள் ஊடாக வெளியேறியுள்ளன. இதன்போது நன்னீர் மீனவ நாடாளுமன்ற உறுப்பினரது கவனத்துக்கு இந்த விடயம் கொண்டு வரப்பட்டுள்ளது.

குறிப்பாக முத்துஐயன்கட்டுக்குளத்தில் ஒரு வருடகாலமாக மீன்குஞ்சுகள் விடப்படாத நிலையில், குறித்த நன்னீர் கிராமிய மீனவர் அமைப்பின் பயனாளிகளிடம் இருந்து பணத்தை அறவிட்டு இந்த வருட ஆரம்பத்தில் மீன்குஞ்சுகள் குளத்தில் விடப்பட்டிருந்தன என்றும் நன்னீர் மீன்பிடியாளர்களால் நாடாளுமன்ற உறுப்பினரிடம் சுட்டிக்காட்டப்பட்டது.

இவ்வாறு விடப்பட்ட மீன்குஞ்சுகள் வான் கதவுகள் ஊடாக வெளியேறியுள்ள நிலையில் நன்னீர் மீன்பிடியை வாழ்வாதாரமாக கொண்டிருக்கும் முத்துஐயன்கட்டு குளம் நன்னீர் கிராமிய மீனவர் அமைப்பில் அங்கத்துவம் பெறுகின்ற 101 அங்கத்துவக் குடும்பங்களின் வாழ்வாதாரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் மீனவர்களால் தெரிவிக்கப்பட்டது. தற்போது ஒரு பயனாளி 1கிலோ தொடக்கம் 02 கிலோ வரையிலான மீன்களையே பிடிக்கக் கூடிய நிலை காணப்படுகிறது என்றும் நன்னீர் மீன்பிடியாளர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனிடம் முறையிட்டனர்.

இந்த நிலைமைகளால் தமது அன்றாட வாழ்வாதாரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்று முத்துஐயன்கட்டுகுளம் நன்னீர் மீனவர்கள் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினரிடம் தெரிவித்தனர்.

இவ்வாறாக பாரிய வாழ்வாதாரப் பாதிப்பை எதிர்நோக்கியுள்ள தமக்கு இதுவரை நிவாரணங்களையோ, இழப்பிடுகளையோ வழங்குவதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கைகளை மேற்கொள்வில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, ஒட்டுசுட்டானுக்குச் செல்வதற்கு உரிய வீதியும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதால் தாம் பல்வேறு போக்குவரத்து நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர் என்றும் இதன்போது நடாளுமன்ற உறுப்பினரிடம் தெரிவித்தனர்.

இந்த நிலையில் மீனவ அமைப்பினரின் பிரச்சினைகளைச் செவிமடுத்த நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன், மீனவ அமைப்பினரிடமிருந்து கோரிக்கைக் கடிதங்களையும் பெற்றுக்கொண்டார்.

அதேவேளை மீனவர்கள் எதிர்நோக்கும் வாழ்வாதார நெருக்கடி மற்றும் போக்குவரத்து நெருக்கடிகள் தொடர்பாக உரிய தரப்பினரின் கவனத்துக்குக் கொண்டுவந்து நெருக்கடிகளைத் தீர்ப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்படும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் இதன்போது தெரிவிக்கப்பட்டது.



# துரிதமாகத் திருத்தப்படுகிறது மன்னம்பிட்டி ரயில் பாதை!

(வி.ரி.சகாதேவராஜா)

அண்மையில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தால் சேதமடைந்த கொழும்பு – மட்டக்களப்பு பிரதான ரயில் பாதை தற்போது மன்னம்பிட்டியில் துரிதமாகத் திருத்தம் செய்யப்பட்டு வருகிறது.

அண்மையில் ஏற்பட்ட பேரிடர் காலத்தில் இருந்து கொழும்பு – மட்டக்களப்பு ரயில் சேவை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதியூடான ரயில் சேவையும் தடைப்பட்டுள்ளது.

மீண்டும் ரயில் சேவையை மீள ஈடுபடுத்துவதற்காக ரயில் பாதைகள் ஆங்காங்கே திருத்தம் செய்யப்பட்டு வருகின்றது.

குறிப்பாக மன்னம்பிட்டியில் ஏற்பட்ட பெருவெள்ளத்தில் ரயில் பாதைகள் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டு இருந்தன .

இன்று கனரக இயந்திரம் மூலம் இரவு பகலாக தொழிலாளர்களின் அர்ப்பணிப்பான சேவையில் அந்தப் பாதைகள் திருத்தம் செய்யப்பட்டு வருகிறது.

மன்னம்பிட்டி பாலம் மற்றும் அந்த ரயில் பாதை திருத்தப்பட்டு நிறைவுறும் பட்சத்தில் விரைவாக கொழும்பு – மட்டக்களப்பு ரயில் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படலாம் என்று நம்பப்படுகிறது.





# ஊவா மாகாணப் பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை!

(நடராஜா மலர்வேந்தன்)

“டித்வா“ புயலுடன் நாட்டுக்கு ஏற்பட்ட அனர்த்த நிலைமை காரணமாக மூடப்பட்ட ஊவா மாகாணப் பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று ஊவா மாகாண கல்விப் பணிப்பாளர் ரோஹித அமரதாச தெரிவித்தார்.

ஊடக சந்திப்பொன்றில் கருத்துத் தெரிவித்த அவர், இரண்டு திகதிகளின் கீழ் ஊவா மாகாண பாடசாலைகளை மீண்டும் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கூறினார்.

அதற்கமைய, கடுமையாக அனர்த்தத்துக்கு உள்ளான பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகள் நாளை 16 ஆம் திகதியும், பாதிக்கப்பட்ட பாடசாலைகள் எதிர்வரும் 29 ஆம் திகதியும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஊவா மாகாணத்தின் மொனராகலை மாவட்டத்திலுள்ள 291 பாடசாலைகளில், பிபிலை வலயத்திலுள்ள தெஹிகலவத்தை பாடசாலை தவிர்ந்த ஏனைய 290 பாடசாலைகளையும் நாளை 16 திறக்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதேபோன்று, பதுளை மாவட்டத்தின் மஹியங்கனை வலயத்தில் திக்யாய வித்தியாலயம், களுக்கல வித்தியாலயம் மற்றும் பின்னகொல்ல வித்தியாலயம் தவிர்ந்த ஏனைய 78 பாடசாலைகளையும் நாளை திறக்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நிலவும் அனர்த்த நிலைமையுடன் பதுளை மாவட்டத்தின் ஏனைய வலயங்களான பதுளை வலயம், பண்டாரவளை வலயம், வெலிமடை வலயம், பசறை வலயம் ஆகிய வலயங்களைச் சேர்ந்த அனைத்து பாடசாலைகளும் நாளை ஆரம்பிக்கப்பட மாட்டாது. 29 ஆம் திகதி அந்த வலயங்களில் உள்ள அனைத்து பாடசாலைகளையும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



# கலாநிதி செல்லையா இராசதுரையின் நினைவஞ்சலிக் கூட்டம் மட்டக்களப்பில்

**(மட்டக்களப்பு நிருபர்)**

மட்டக்களப்பின் முடிசூடா மன்னன் எனப் போற்றப்படும் சொல்லின் செல்வர் அமரர் கலாநிதி செல்லையா இராசதுரையின் நினைவஞ்சலி கூட்டம் கிழக்குத் தமிழர் கூட்டமைப்பின் ஏற்பாட்டில், மட்டக்களப்பில் உள்ள தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் தலைமை அலுவலகத்தில் ஞாயிற்றுக் கிழமை நேற்று நடைபெற்றது.

தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் சிரேஷ்ட பிரதி தலைவர் நாகலிங்கம் திரவியம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முன்னதாக கட்சி கொடி அரைக் கம்பத்தில் ஏற்றப்பட்டு. அன்னாரின் திருவுருவ படத்துக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு, ஈகை சுடர் ஏற்றுலுடன் மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

தொடர்ந்து மட்டக்களப்பின் முடிசூடா மன்னன் எனப் போற்றப்படும் சொல்லின் செல்வர் அமரர் கலாநிதி செல்லையா இராசதுரை ஆற்றிய சேவைகள் தொடர்பில் நினைவுரைகள் இடம்பெற்றன.

இதன்போது த.ம.வி.பு. கட்சியின் பொதுச் செயலாளர் பூ.பிரசாந்தன், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கட்சியின் உறுப்பினர்கள், என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான அமரர் செல்லையா இராஜதுரை கடந்த 07 ஆம் திகதி சென்னையில் உடல் நலக்குறைவால் இயற்கை எய்தினார்.
















# நிலாவெளி புறாத்தீவுப் பூங்கா தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது

(எஸ்.கீதபொன்கலன்)

கடல் கொந்தளிப்பு மற்றும் மோசமான வானிலை காரணமாக நிலாவெளி புறா தீவு தேசிய பூங்கா(புறாமலை) இன்று முதல் சுற்றுலாப் பயணிகளுக்குத் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. தீவுக்குள் நுழைவதற்கான டிக்கெட்டுகளை வழங்குவதும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்று வனவிலங்கு பாதுகாப்புத் துறை தெரிவித்துள்ளது.

கடல் கொந்தளிப்பு மற்றும் மோசமான வானிலை எப்போது அதிகரிக்கும் என்பதை குறிப்பிட முடியாது.

ஆண்டின் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஏற்படும் இந்த சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று பூங்காக் காப்பாளர் கூறினார்.

# வெள்ள அனர்த்தத்தால் பாதித்த மூதூர் பிரதேச மக்களுக்கு உதவி



(றியாஸ் ஆதம்)

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேசத்தில் ஏற்பட்ட பாரிய வெள்ள அனர்த்தத்தால் பல்லாயிரக் கணக்கான குடும்பங்கள் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்தன. அத்துடன் அந்தப் பகுதி மக்களின் வாழ்வாதாரம் மற்றும் இயல்பு வாழ்க்கையும் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் நலன்கருதி, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் தலைமையிலான பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் அனர்த்த மனிதாபிமான குழுவினர் கடந்த சனிக்கிழமை மூதூர் பிரதேசத்துக்கு விஜயம் செய்து, பாதிக்கப்பட்ட மக்களை நேரில் பார்வையிட்டனர்.

அவர்களின் அத்தியாவசியத் தேவைகளைக் கருத்தில் கொண்டு நிவாரணப் பொதிகளையும் வழங்கி வைத்தனர்.

மேலும், வெள்ள அனர்த்தத்துக்குப் பின்னர் ஏற்படக்கூடிய தொற்று நோய்கள், குடி தண்ணீர் பிரச்சினை, சுற்றுச் சூழல் பாதுகாப்பு பிரச்சினைகள் போன்றவற்றைத் தடுக்கும் நோக்கிலும் அதிகாரிகள் மக்களுடன் கலந்துரையாடி தேவையான அறிவுறுத்தல்களையும் வழங்கினர்.

இந்த மனிதாபிமானப் பணியில், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் ஏ.பி. மசூத், பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுப் பிரிவின் பொறுப்பு வைத்தியர் டாக்டர் எம்.சி.எம்.மாஹிர், தொற்றா நோய் தடுப்புப் பிரிவின் பொறுப்பு வைத்தியர் டாக்டர் எம்.ஐ.எம்.எஸ்.இர்ஷாட், சுகாதார தகவல் முகாமைத்துவ பிரிவின் பொறுப்பு வைத்தியர் டாக்டர் ஐ.எம்.முஜீப், சுற்றுச்சூழல் தொழில்சார் உணவுப் பாதுகாப்பு பிரிவின் பொறுப்பு வைத்தியர் டாக்டர் ஏ.எஸ்.எம்.பௌசாத், ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ஐ.எல். அப்துல் ஹை உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, அதன் கீழ் இயங்கும் சுகாதார நிறுவனங்கள் மற்றும் கல்முனை பிராந்திய தனியார் பாமசி உரிமையாளர் சங்கம் ஆகியவற்றின் பங்களிப்புடன் இந்த மனிதாபிமான நிவாரணப் பணி சிறப்பாக முன்னெடுக்கப்பட்டது.

# கிழக்கில் விவசாய இழப்புக்கான உதவிகளை வழங்க நடவடிக்கை

## கிழக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் எம்.எஸ்.றினூஸ் தெரிவிப்பு

(மட்டக்களப்பு நிருபர்)

கிழக்கு மகாணத்தில் ஏற்பட்ட விவசாய இழப்புக்கான உதவு தொகையை வழங்குவதற்காகத் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கிழக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் எம்.எஸ்.றினூஸ் தெரிவித்துள்ளார்.

டித்வா புயல் மற்றும் சீரற்ற கால நிலை ஏற்படுத்திய தாக்கத்தின் காரணமாக, கணிசமான அழிவுகளைச் சந்தித்த கிழக்கு மகாண விவசாயிகளுக்கு இழப்புக்கான உதவு தொகையை வழங்குவதற்காக விவசாயத் திணைக்களமும் கமநல அபிவிருத்தித் திணைக்களமும் இணைந்து துரித நடவடிக்கை எடுத்துள்ளன.

விவசாயத் திணைக்களத்தின் கிழக்கு மாகாணவிவசாயப்பணிப்பாளர்எம்.எஸ். றினூஸ் தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பில் அவரிடம் தொடர்பு கொண்டு வினவியபோது அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,



கிழக்கு மகாணத்தில் ஏற்பட்ட நெற்செய்கை இழப்புக்கான உதவு தொகையை வழங்குவதற்கா, விவசாயத் திணைக்களமும் கமநல அபிவிருத்தித் திணைக்களமும் இணைந்து கடந்த 9 ஆம் திகதியில் இருந்து அழிவு மதிப்பீட்டுப் படிவங்களை விவசாயிகளுக்கு வழங்கி தகவல் திரட்டத் தொடங்கியுள்ளன.

அதேவேளை, மறுவயல் பயிர்கள், பழப்பயிர்கள், மரக்கறிப்பயிர்கள் என்பன வற்றுக்கான அழிவு மதிப்பீடுகளை நேரடியாக விவசாயத் திணைக்களமே மேற்கொண்டு வருகின்றது.

இந்த தகவல்களைத் திரட்டி அவற்றை அதிகார பூர்வமாக உறுதிப்படுத்தி நாங்கள் அனுப்பி வைக்க வேண்டும். அதன் பின்னர் பேராதனையிலுள்ள விவசாயத் திணைக்களத் தலைமை அலுவலகத்தின் மூலமாக விவசாயிகள் தங்களுக்கான இழப்பீட்டுத் தொகையைப் பெற்றுக் கொள்வார்கள்.

தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் துரித விவசாய மீளமைப்பு நடவடிக்கைகளின் பயனாக, இந்த மாத இறுதிக்குள் விவசாயிகள் தங்களுக்கு ஏற்பட்ட அழிவுக்கான இழப்பீடுகளைப் பெற்றுக் கொள்வார்கள்.

மேலும், அழிவடைந்த விவசாய நிலங்களில் மீள் நடுகையும் உடனடியாக ஆரம்பிக்கப்படவுள்ளது. மீள் நடுகைக்கான கலப்பின மரக்கறி விதைகள் நடுகைக்கான தானியங்கள் உள்நாட்டில் கிடைக்காவிட்டால், அவற்றை வெளிநாடுகளிலிருந்தும் உடனடியாக இறக்குமதி செய்து விவசாயிகளுக்கு வழங்கத் துரித கதி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, அழிவுகளைக் கண்டு சோர்வடையாத விவசாயிகள் ஏற்கெனவே, தாங்களாகவே முன்வந்து, சுய முயற்சியில் மீளவும் விவசாய நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளானர். இது நம்பிக்கை தருவதாக அமைந்துள்ளது.- என்றார்.




# சுற்றுலாப் பயணிகள் பயணித்த ஜெப் வாகனம் யாலவில் விபத்து

(உடப்பு க.மகாதேவன்)

யால வனப் பகுதியில் சுற்றுலாப் பயணிகளுடன் பயணித்துக் கொண்டிருந்த சபாரி ஜெப் ரக வாகனம், யால எட்டுள்ள பகுதியில் பாதையில் இருந்து விலத்தி வனப் பகுதிக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானது.

இன்று காலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் பயணித்த வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் இருவருக்குச் சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளன. அவர்கள் கிரிந்த மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.





# சாவகச்சேரி சுகாதாரப் பணியாளர்களுக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் நிவாரணம்

டித்வா புயலால் பாதிக்கப்பட்ட – சாவகச்சேரி நகரசபை நிர்வாகத்தில் உள்ள, சாரதிகள், தூய்மைப் பணியாளர்கள் 30 பேருக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உணவுப் பொருள்கள் (அரிசி, பருப்பு, சீனி, மா,சோயாமீற், தேயிலை) வழங்கப்பட்டன.

இன்று திங்கள்கிழமை காலை 9.30 மணிக்கு நகராட்சி மன்ற பொன் விழா மண்டபத்தில் வைத்து இது வழங்கப்பட்டது.

இந்த உதவித் திட்டத்தில் நகராட்சி மன்ற தவிசாளர் – ஸ்ரீ பிரகாஸ், உப தவிசாளர் கிசோர், செயலாளர் நிசான், சுகாதாரப் பரிசோதகர் கு. குணசாந்தன் மற்றும் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் செ.மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாக இவற்றை வழங்கி வைத்தார்.







# பா.ஜ.க. வேட்பாளரிடம் 26 வாக்குகளினால் தோல்வி: அதிர்ச்சியில் காங். கூட்டணி பெண் வேட்பாளர் சாவு



திருவனந்தபுரம்,டிசெ.15

கேரளாவில் உள்ளாட்சி தேர்தல் 2 கட்டமாக நடந்தது. இதையடுத்து வாக்கு எண்ணிக்கை நேற்று முன் தினம் நடைபெற்றது. இதில் திருவனந்தபுரம் மாநகராட்சியை பா.ஜனதா கைப்பற்றியுள்ளது.

இந்தநிலையில் இடவக்கோடு வட்டாரத்தில் காங்கிரஸ் கூட்டணி சார்பில் கடந்த முறை வெற்றி பெற்றிருந்த சி.எம்.பி. கட்சியை சேர்ந்த பெண் வேட்பாளர் சினி போட்டியிட்டார். இவர் இந்த முறையும் வெற்றி பெறுவார் என்று பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இவரை எதிர்த்து போட்டியிட்ட பா.ஜனதா வேட்பாளர் சுவாதி 1,889 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்.

சினி 1,863 வாக்குகள் பெற்றிருந்தார். இதனால் பா.ஜனதா வேட்பாளரிடம் 26 வாக்குகள் வித்தியாசத்தில் சினி தோல்வியடைந்தார். இந்த தோல்வியால் அவர் கடும் அதிர்ச்சி அடைந்தார். இந்த வார்டில் சினி என்ற பெயரில் மேலும் 2 பெண் வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இவர்களுக்கு மொத்தம் 44 வாக்குகள் கிடைத்தன. இதுதான் சினியின் தோல்விக்கு காரணமாகக் கருதப்படுகிறது.

இந்தநிலையில் வீட்டில் இருந்த சினி திடீரென மயங்கி விழுந்தார். உடனே அவரை உறவினர்கள் மீட்டு அருகில் உள்ள ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்த்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி சினி பரிதாபமாக உயிரிழந்தார். அவருக்கு சிகிச்சை அளித்த டாக்டர்கள், திடீர் மாரடைப்புதான் மரணத்திற்கு காரணம் என்று கூறினர். இந்தசம்பவம் தொண்டர்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.



# இந்தியாவில் தங்கத்தின் விலை ஒரு லட்சம் ரூபாவை எட்டுகிறது

சென்னை,டிசெ.15

இந்தியாவில் தங்கத்தின் விலை அந்த நாட்டின் நாணயப்படி ஒரு லட்சம் ரூபாவை எட்டுகிறது'

தங்கம் விலை மீண்டும் கட்டுக்கடங்காத காளையாய் துள்ளிக்குதித்து எகிறி வருகிறது. இதனால் ஒவ்வொரு நாளும் உயர்ந்து வரலாறு காணாத உச்சத்தில் தங்கம் விற்பனையாகிறது. தங்கத்துக்குப் போட்டியாக வெள்ளி விலையும் உயர்ந்து வருகிறது.

இந்த நிலையில், இந்தியாவில் வாரத் தொடக்க நாளான இன்று தங்கம் விலை உயர்ந்து வரலாறு காணாத புதிய உச்சத்தில் விற்பனை செய்யப்படுகிறது. இந்தியப் பணத்தில் கிராமுக்கு 90 ரூபா உயர்ந்து ஒரு கிராம் தங்கம் ரூ.12,460க்கும் சவரனுக்கு 720 ரூபா உயர்ந்து ஒரு சவரன் ரூ.99,680-க்கும் விற்பனையாகிறது. இதனால் சவரன் ரூ.1 லட்சத்தை நெருங்குவதால் பெண்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

இதனை தொடர்ந்து, தங்கத்துக்கு போட்டியாக வெள்ளி விலையும் இன்று அதிரடியாக உயர்ந்துள்ளது. கிராமுக்கு 3 ரூபா உயர்ந்து ஒரு கிராம் வெள்ளி 213 ரூபாவுக்கும் கிலோவுக்கு மூவாயிரம் ரூபா உயர்ந்து பார் வெள்ளி 2 லட்சத்து 13 ஆயிரம் ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகிறது.

கடைசி ஐந்து நாள்களில் தமிழகத்தில் ஒரு பவுண் (22 காரட்) தங்கத்தின் விலை நிலைவரம் வருமாறு:-

14 ஆம் திகதி - ரூ.98,960
13 ஆம் திகதி - ரூ.98,960
12 ஆம் திகதி - ரூ.98,960
11 ஆம் திகதி - ரூ.96,400
10 ஆம் திகதி - ரூ.96,240



# கடும் பனிமூட்டம் காரணமாக இன்று டெல்லியில் 40 விமானங்கள் ரத்து!

டெல்லி,டிசெ.15

கடும் பனிமூட்டம் காரணமாக டெல்லியில் 40 விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. 4 விமானங்கள் திருப்பிவிடப்பட்டன.

டெல்லி உள்ளிட்ட வடமாநிலங்களில் கடும் பனிமூட்டத்தால் விமான சேவைகளில் பாதிப்பு ஏற்படலாம் என்பதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விமான நேரம் குறித்து அறிந்து கொண்டு பயணிகள் விமான நிலையத்துக்குச் செல்ல விமான போக்குவரத்து அமைச்சகம் அறிவுறுத்தல் வழங்கி உள்ளது.

டெல்லி மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் நிலவும் அடர்ந்த பனிமூட்டம் சாலைப் போக்குவரத்து மட்டுமின்றி, விமானப் போக்குவரத்தையும் வெகுவாகப் பாதித்துள்ளது. பனிமூட்டம் காரணமாக டெல்லி விமான நிலையத்தில் விமானங்களின் இயக்கம் தாமதமாகி வருகிறது. விமானங்களின் தரையிறக்கமும் தடைபட்டுள்ளது. இன்று காலை 9:30 மணி நிலவரப்படி, 40 விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன, மேலும் 4 விமானங்கள் வேறு விமான நிலையங்களுக்குத் திருப்பி விடப்பட்டுள்ளன.

இந்த மோசமான சூழலைக் கருத்தில் கொண்டு, இண்டிகோ, ஸ்பைஸ் ஜெட் மற்றும் ஏர் இந்தியா ஆகிய மூன்று முக்கிய விமான நிறுவனங்களும் பயணிகளுக்கான ஆலோசனைகளை வெளியிட்டுள்ளன. "பனிமூட்டம் காரணமாக விமானச் சேவை பாதிக்கப்பட்டுள்ளது. நாங்கள் வானிலையைக் கூர்ந்து கவனித்து வருகிறோம், பாதுகாப்பான பயணத்தை உறுதிப்படுத்தத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறோம்" என்று அந்நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.



# ஜோர்டான், எத்தியோப்பியா, ஓமனுக்கு விஜயத்தை ஆரம்பித்தார் பிரதமர் மோடி

டெல்லி,டிசெ.15

4 நாள்கள் அரசு முறைப் பயணமாக 3 நாடுகளுக்கு பிரதமர் மோடி சுற்றுப்பயணத்தை தொடங்கியுள்ளார். அவர் ஜோர்டான், எத்தியோப்பியா, ஓமன் ஆகிய நாடுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ள உள்ளார்.

சுற்றுப்பயணத்தின் முதல் நாடாக பிரதமர் மோடி இன்று ஜோர்டான் செல்கிறார். இதற்காக டெல்லி விமான நிலையத்தில் இருந்து தனி விமானம் மூலம் அவர் ஜோர்டான் புறப்பட்டுச் சென்றார்.

ஜோர்டான் செல்லும் பிரதமர் மோடி அந்நாட்டு மன்னர் 2 ஆம் அப்துல்லா பின் அல் ஹுசைனை சந்திக்கிறார். இந்த சந்திப்பின்போது இருநாட்டு உறவு, வர்த்தகம் உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து இரு தலைவர்களும் ஆலோசனை நடத்த உள்ளனர்.

ஜோர்டான் பயணத்தை நிறைவு செய்து பிரதமர் மோடி நாளை எத்தியோப்பியா செல்கிறார். எத்தியோப்பியாவிற்கு பிரதமர் மோடி மேற்கொள்ளும் முதல் பயணம் இதுவாகும். அங்கும் அவர் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

இதனைத் தொடர்ந்து ஓமன் செல்லும் பிரதமர் மோடி அந்நாட்டு மன்னர் ஹைதம் பின் தாரிக்கை சந்திக்கிறார். இந்த சந்திப்பின்போது பல்வேறு முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாக உள்ளன.






# பாகிஸ்தானைச் சேர்ந்த தந்தையும் மகனுமே ஆஸியில் 16 பேரைச் சுட்டுக் கொன்றனராம்!

## பத்து நிமிட வெறியாட்டத்தில் 50 க்கும் அதிக சூடுகள்

சிட்னி,டிசெ.15

ஆஸ்திரேலியாவில் துப்பாக்கிச் சூடு நடத்திய பயங்கரவாதிகள் இருவரும் பாகிஸ்தானைச் சேர்ந்த தந்தையும் மகனும் என்று தெரியவந்துள்ளது.

ஆஸ்திரேலியாவின் பிரபலமான சுற்றுலா தலமான போண்டி கடற்கரை, அந்நாட்டின் முக்கிய நகரமான சிட்னிக்கு அருகில் உள்ளது. நேற்று விடுமுறை தினம் மற்றும் யூத மதத்தினரின் முக்கிய பண்டிகையான ஹனுக்கா எனப்படும் ஒளியை கொண்டாடும் விழாவின் முதல் நாள் என்பதால், கடற்கரையில் ஏராளமான மக்கள் கூடியிருந்தனர்.

அங்கு கூடியிருந்த மக்களை நோக்கி, பயங்கரவாதிகள் இரண்டு பேர் கண்மூடித்தனமாக சுடத் துவங்கினர். இரு பயங்கரவாதிகளும் 10 நிமிடங்களுக்கும் மேலாக 50க்கும் மேற்பட்ட முறை சுட்டனர். இதில் பொது மக்களில், 16 பேர் உயிரிழந்தனர்; நாற்பது பேர் வரைக் காயமடைந்தனர்.

பின்னர், பயங்கரவாதிகளை நோக்கி பொலிஸார் நடத்திய பதில் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றொருவர் சுட்டு பிடிக்கப்பட்டார். அவர் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். தற்போது, துப்பாக்கிச்சூடு நடத்திய பயங்கரவாதிகள் இருவரும் பாகிஸ்தானை சேர்ந்தவர்கள் என்பது தெரியவந்தது.



தந்தை பெயர் சஜித் அக்ரம் (வயது 50, மகன் பெயர் நவீத் அக்ரம் (வயது24) என அடையாளம் காணப்பட்டனர். பொலிஸ் சுட்டதில் தந்தை உயிரிழந்த நிலையில் மகனுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது. தந்தை ஆஸ்திரேலியாவில் பழக் கடை நடத்தி இருக்கிறார். அவர் 2015 முதல் துப்பாக்கி உரிமம் வைத்திருக்கிறார்.

இருவரும் பாகிஸ்தானில் இருந்து ஆஸ்திரேலியாவுக்கு குடி பெயர்ந்து உள்ளனர் என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது. எந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள், எதற்கு தாக்குதல் நடத்தினர் என்பது குறித்து விசாரணை நடந்து வருகிறது.

எல்லை தாண்டிய பயங்கரவாத நடவடிக்கைகளின் தாயகமாக பாகிஸ்தான் இருப்பதாக இந்தியா நீண்ட காலமாக குற்றம் சாட்டி வருகிறது. உலகில் பல்வேறு இடங்களில் நடக்கும் பயங்கரவாத சம்பவங்களில் பாகிஸ்தானை சேர்ந்தவர்கள் ஈடுபடுவது தொடர்ந்து அம்பலமாகி வருகிறது.

இதற்கு அந்த நாட்டு அரசும், இராணுவமும் நேரடியாக பயங்கரவாத அமைப்புகளுக்கு அளிக்கும் ஆதரவே முக்கிய காரணம் என்றும் இந்தியா தொடர்ந்து பல்வேறு சர்வதேச அமைப்புகளில் குற்றம் சாட்டி வருகிறது. இத்தகைய சூழ்நிலையில், ஆஸ்திரேலியாவில் நடந்த இந்த பயங்கர சம்பவத்தில் ஈடுபட்டது பாகிஸ்தானை சேர்ந்தவர்கள் என்ற தகவல் உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவின் நியுசவுத் வேல்ஸ் மாகாணத்தின் சிட்னி நகரில் போண்டி என்ற இடத்தில் உள்ள கடற்கரை மிகவும் பிரபலமானதாகும். விடுமுறை நாட்களில் இந்த கடற்கரையில் மக்கள் கூட்டம் அலை மோதும். அந்த வகையில் ஞாயிற்றுக் கிழமையான நேற்று மக்கள் கடற்கரையில் பொழுதைக் கழித்துக் கொண்டிருந்த நிலையில், அங்கு வந்த இரண்டு மர்ம நபர்கள் கண்மூடித்தனமாக துப்பாக்கி சூடு நடத்தியுள்ளனர். இந்த துப்பாக்கி சூட்டில் 16 பேர் பலியாகியுள்ளனர். இதில் ஒரு குழந்தையும் அடங்கும்.40 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என நியூ சவுத் வேல்ஸ் காவல்துறை உறுதிப்படுத்தியுள்ளது.

ஆஸ்திரேலியாவை உலுக்கியுள்ள இந்த சம்பவத்திற்கு அந்நாட்டு பிரதமர் அந்தோனி அல்பனீஸ் அதிர்ச்சி தெரிவித்துள்ளார்.

போண்டி கடற்கரை மற்றும் போண்டி பகுதியில் உள்ள சுற்றியுள்ள சாலைகள் இன்று மூடப்படும் என்று நியூ சவுத் வேல்ஸ் காவல்துறை தெரிவித்துள்ளது.




# நேட்டோவில் இணையும் முயற்சியைக் கைவிடத் தயார் இப்போது சொல்கின்றார் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி



கீவ்,டிசெ.15

மேற்கத்திய நாடுகளிடமிருந்து உறுதியான பாதுகாப்பு உத்தரவாதங்களை பெற்றால், நேட்டோவில் இணையும் முயற்சியை கைவிட தயாராக இருக்கிறோம் என உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி தெரிவித்து உள்ளார்.

நேட்டோவில் இணையும் உக்ரைனின் முடிவுக்கு எதிராகவே அந்த நாட்டின் மீது ரஷ்யா போர் தொடுத்தது என்பது தெரிந்ததே.

ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையிலான போர் தொடர்ந்து நீடித்து வருகிறது. இரு நாடுகளுக்கு இடையே அமைதி ஒப்பந்தம் ஏற்படுத்த அமெரிக்கா தீவிர முயற்சி மேற்கொண்டு வருகிறது. ஆனால் தீர்வு இல்லாத நிலை தொடர்ந்து நீடிக்கிறது.

இந்தசூழலில், உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி அந்நாட்டு செய்தி சேனலுக்கு அளித்த பேட்டியில் முக்கிய விடயங்களைத் தெரிவித்து இருக்கின்றார். அவற்றின் விவரம் வருமாறு:-

ஆரம்பத்தில் இருந்தே, உக்ரைனின் விருப்பம் நேட்டோவில் சேருவதாக இருந்தது; இவை உண்மையான பாதுகாப்பு உத்தரவாதங்கள். அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவைச் சேர்ந்த சில கூட்டாளிகள் இந்த முடிவை ஆதரிக்கவில்லை. மாற்று ஏற்பாடுகள் இன்னும் வலுவான பாதுகாப்பை வழங்க முடியும். இன்று, உக்ரைனுக்கும், அமெரிக்காவிற்கும் இடையிலான இருதரப்பு பாதுகாப்பு உத்தரவாதங்கள் ரஷ்ய படையெடுப்பைத் தடுக்க முடியும்.

அமைதியையும், ரஷ்யா மற்றொரு தாக்குதலை நடத்தாது என்பதற்கான உறுதியான உத்தரவாதங்களையும் உக்ரைன் விரும்புகிறது. உக்ரைன் நகரங்கள் மற்றும் முக்கியமான உள் கட்டமைப்புகள் மீது தொடர்ச்சியான தாக்குதல்கள் மூலம் ரஷ்யா வேண்டுமென்றே மோதலை நீடிக்கிறது. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ஐரோப்பாவில் ஏற்பட்ட மிக மோசமான போர் இதுவாகும். ரஷ்யாவிடம் உக்ரைன் எந்த பிராந்தியத்தையும் விட்டுக்கொடுக்காது. - இவ்வாறு ஜெலன்ஸ்கி கூறினார்.




# ஹொலிவுட் இயக்குநரும், மனைவியும் லாஸ் ஏஞ்சலஸில் குத்திப் படுகொலை!

லாஸ் ஏஞ்சலஸ், டிசெ.15

அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சலஸில் பிரபல ஹொலிவுட் இயக்குநரும், தயாரிப்பாளருமான ராப் ரெய்னர் மற்றும் அவரது மனைவி கத்தியால் குத்தப்பட்டு உயிரிழந்த நிலையில் சடலங்களாக மீட்கப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

லாஸ் ஏஞ்சலஸில் உள்ள பிரென்ட்வுட் வீட்டில் 78 வயது மற்றும் 68 வயதுடைய தம்பதியர் கத்தியால் குத்தப்பட்டு உயிரிழந்தனர் எனொ நேற்று பொலிஸார் தகவல் தெரிவித்தனர். உயிரிழந்த நபர்கள் குறித்து ஆரம்பத்தில் விவரம் வெளியாகாத நிலையில், பின்னர் அது ஹொலிவுட் இயக்குநரும், தயாரிப்பாளருமான ராப் ரெய்னர் மற்றும் அவரது மனைவி மிக்கேல் என்பது உறுதி செய்யப்பட்டது.

உடலில் பல இடங்களில் கத்தியால் குத்தப்பட்ட காயங்கள் இருந்தன எனப் பொலிஸெ தெரிவித்தனர். இந்த சம்பவம் ஹொலிவுட் திரையுலகினரை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

1971 இல் நடிகராக திரையுலக வாழ்க்கையை தொடங்கிய அவர் இயக்குநர் மற்றும் தயாரிப்பாளராகவும் ஜொலித்தார். திஸ் இஸ் ஸ்பைனல் டேப், தி பிரின்சஸ் பிரைட் உள்ளிட்ட பல்வேறு படங்களை இயக்கியுள்ளார். சிறந்த இயக்குநருக்கான கோல்டப் குளோப் விருதை 4 முறை வென்றுள்ளார்.

கனடா முரசு
திங்கட்கிழமை 15/12/2025

**பிஸ்தா கலந்த பல பொருள்களுக்கு கனடாவில் மீள அழைப்பு விஸ்தரிப்பு**



02



# கனடா - இந்தியா இடையே சுதந்திர வர்த்தக ஒப்பந்தம்!

## பொதுக் கருத்து கேட்கும் நடவடிக்கை ஆரம்பம்

கனடா அரசு, இந்தியாவுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (FTA) தொடர்பான பேச்சுக்கு முன், பொதுக் கருத்து கேட்கும் (Public Consultations) செயல் முறையை தொடங்கியுள்ளது.

இந்த ஆலோசனைகள் 2026 ஜனவரி 27 வரை நடைபெறும்.

கனடா சர்வதேச வர்த்தக அமைச்சர் மனிந்தர் சிது “இந்தியாவுடன் விரிவான பொருளாதார கூட்டு ஒப்பந்தம் (Comprehensive Economic Partnership Agreement - CEPA) குறித்து பேச்சு நடத்துவதற்கு முன், வணிக மற்றும் சமூக அமைப்புகளின் கருத்துகளை கேட்பது அவசியம்” எனக் கூறியுள்ளார்.

02

# பிரிட்டிஷ் ஆங்கிலத்தை நுழைக்காதீர்! கனடா முறைமையையே தொடருங்கள்

## மொழியியல் வல்லுநர்கள் பிரதமர் மார்க் கார்னிக்கு அறிவுறுத்தல்

கனடிய ஆங்கிலத்தை ஊக்குவிப்பவர்கள், மத்திய அரசு அதிகாரப்பூர்வ ஆவணங்களில் ஆங்கிலச் சொற்களுக்கு பிரிட்டிஷ் மரபுப் பாணி எழுத்துக்களை (எழுத்துக் கூட்டல்களை) பயன்படுத்துவதன் மூலம் உலகிற்குத் தவறான செய்தியை அனுப்புவதாகக் குறை கூறுகின்றனர்.

பிரதமர் மார்க் கார்னிக்கு எழுதிய கடிதத்தில், மொழியியல் வல்லுநர்கள் ஐவரும், பத்திரிகை ஆசிரியர்களின் சங்கப் பிரதிநிதியும், கனடிய தேசியத்தை உயர்த்திப் பிடித்து நிலைநிறுத்த எளிய வழி கனடிய

02





# பிஸ்தா கலந்த பல பொருள்களுக்கு கனடாவில் மீள அழைப்பு விஸ்தரிப்பு

பக்டீரியா மாசுபாடு காரணமாக பிஸ்தா மற்றும் பிஸ்தா கலந்த பல பொருள்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்த தேசிய மீள அழைப்பை (recall) மேலும் விரிவாக்கியுள்ளதாக கனடிய உணவு பரிசோதனை முகவர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

டிசம்பர் 12 அன்று வெளியிடப்பட்ட புதுப்பிப்பு அறிவிப்பின்படி, தற்போது 241 தயாரிப்புகள் பல்வேறு பிராண்டுகளில் இருந்து மீள அழைக்கப்பட்டுள்ளன.

ஒன்றாரீயோ, அல்பர்ட்டா, பிரிட்டிஷ் கொலம்பியா, மானிடோபா, நியு பிரவுன்ஸ்விக், நியபவுண்ட்லாந்த், நோவா ஸ்கோஷியா மற்றும் சஸ்கட்ச்வான் ஆகிய மாகாணங்களில் இவை விற்பனை செய்யப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.இத்தயாரிப்புகள் ஒன்லைனிலும் விற்கப்பட்டன எனத் தெரிவிக்கப்படு கின்றது.

“சால்மொனெல்லா மாசுபட்ட உணவுகள் தோற்றத்திலும் மணத்திலும் கெட்டவையாகத் தெரியாமல் இருக்கலாம்; இருந்தாலும் உடல்நலக் கோளாறுகளை ஏற்படுத்தலாம்” என அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

கடந்த ஜூலை மாதம் முதல் பிஸ்தா தொடர்பான மீள அழைப்புகள் தொடங்கப்பட்டு, உணவு பாதுகாப்பு விசாரணை முன்னேறியதுடன் பட்டியல் தொடர்ந்து புதுப்பிக்கப்பட்டு வருகிறது.

மார்ச் மாதத்திலிருந்து இதுவரை 155 சால்மொனெல்லா தொற்றுகள் பதிவாகியுள்ளன; இதில் 24 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

முன்பு, ஈரானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பிஸ்தா தொடர்பாக 160-க்கும் மேற்பட்ட மீள அழைப்புகள் இருப்பதாக கனடிய உணவு பரிசோதனை முகவர் நிறுவனம் தெரிவித்திருந்தது.

---

## பிரிட்டிஷ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாணியைப் பக்கத்தில் வைத்திருப்பதுதான் என்று கூறுகின்றனர்.

டிசம்பர் 11 ஆம் தேதி தி கனடிய ஊடகங்களுக்கொ பகிர்ந்து கொள்ளப்பட்ட கடிதத்தில் இவ்விடயம் விவரிக்கப்பட்டுள்ளது. 2025 மத்திய அரசின் வரவு - செலவுத் திட்டம் உள்ளிட்ட ஆவணங்களில் utilization, globalization and catalyze என்ற கனடிய எழுத்துக் கூட்டலுக்கு மாறாக, utilisation, globalisation, catalyse என்ற ஆங்கில எழுத்துக் கூட்டல் பயன்படுத்துவதாகச் சுட்டப்படுகின்றது.

கனடாவில் - புத்தகம் மற்றும் பத்திரிகை வெளியீடு, செய்தித்தாள்கள் மற்றும் பிற ஊடகங்கள் மற்றும் கூட்டாட்சி மற்றும் மாகாண அரசாங்கங்கள் மற்றும் அவற்றின் சட்டமன்றங்களில் கனேடிய எழுத்துக் கூட்டல் முறைமையே பரவலாகவும் மிகவும் சீராகவும் பயன்படுத்தப்படுகிறது என்றும் அந்தக் கடிதம் கூறுகிறது.

"அரசாங்கங்கள் எழுத்துக் கூட்டலுக்கு வேறு அமைப்புகளைப் பயன்படுத்தத் தொடங்கினால், எந்த முறைமை கனடியமானது என்ற குழப்பத்திற்கு அது வழிவகுக்கும். அத்தோடு கூடுதலாக, கனடிய எழுத்துக் கூட்டல் நாட்டின் தனித்துவமான அடையாளத்தின் ஒரு முக்கிய அங்கமாகும்." என்றும் கடிதம் எழுதியவர்கள் கூறுகிறார்கள்.

கனடிய ஆங்கில் மொழிப் பாணி பிரிட்டன் மற்றும் அமெரிக்கா இரண்டிலிருந்தும் உள்வாங்கப்பட்டது.

“கனடிய ஆங்கிலம் இங்கு உருவானது. அது நமது கலாசாரத்தின் தனித்துவமான அம்சத்தை பிரதிபலிக்கிறது. இது நமது வரலாறு மற்றும் அடையாளத்தின் ஒரு பகுதியாகும்” என்று அந்தக் கடிதம் கூறுகிறது.

இந்தக் கடிதத்தில் மொழியியல் பேராசிரியர்கள் ஜே.கே. சேம்பர்ஸ், சாண்ட்ரா கிளார்க், ஸ்டீபன் டோலிங்கர் மற்றும் சாலி டாக்லியாமோன்ட், கனடிய ஆங்கில அகராதியின் தலைமை ஆசிரியர் ஜான் சியூ மற்றும் எடிட்டர்ஸ் கனடா அமைப்பின் தலைவர் கெய்ட்லின் லிட்டில்சைல்ட் ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர்.

இந்தக் கடிதம் குறித்து கனடா பிரதமரின் அலுவலகம் எந்தப் பதிலும் இது வரை அளிக்கவில்லை.

---

## கனடா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய அரபு அமீரகம், தாய்லாந்து ஆகிய நாடுகள் மற்றும் தென் அமெரிக்க வர்த்தக அமைப்பான Mercosur ஆகியவற்றுடன் இதேபோன்ற விரிவான பொருளாதார கூட்டு ஒப்பந்தம் செய்வது தொடர்பான ஆலோசனைகளை கனடா தொடங்கியுள்ளது.

கனடாவின் நோக்கம்

கனடாப் பிரதமர் மார்க் கார்னி “அடுத்த 10 ஆண்டுகளில், அமெரிக்கா வைத் தவிர்ந்த பிற நாடுகளுக்கு கனடாவின் ஏற்றுமதியை இரட்டிப்பு செய்ய வேண்டும்” எனக் குறிப்பிட்டுள்ளார்.

2024 இல், இந்தியா கனடாவின் ஏழாவது பெரிய வணிக கூட்டாளியாக இருந்தது. இருதரப்பு வணிகம் 30.8 பில்லியன் கனேடிய டொலர் அளவுக்கு இருந்தது.

விரிவான பொருளாதார கூட்டு ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்தால், 2030-க்குள் இருதரப்பு வணிகம் 70 பில்லியன் கனேடிய டொலராக உயரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

பின்னணி

2022 இல், விரிவான பொருளாதார கூட்டு ஒப்பந்தத்திற்குப் பதிலாக பூர்வாங்க முன்னேற்ற வர்த்தக ஒப்பந்தம் ( Early Progress Trade Agreement - EPTA) தொடங்கப்பட்டது.

ஆனால், 2023 இல், கனடாவின் முன்னாள் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ “இந்திய முகவர்கள், ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலைக்கு தொடர்புடையவர்கள்” எனக் கூறியமையால், வர்த்தகப் பேச்சுகள் நிறுத்தப்பட்டன.

2025 இல், புதிய பிரதமர் கார்னி, இந்திய பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து உறவை மீண்டும் தொடங்கினார்.

இந்த ஆலோசனைகள், வணிக வளர்ச்சி, வேலை வாய்ப்பு, முதலீட்டு வாய்ப்புகள் ஆகியவற்றை மேம்படுத்தும். இதன்மூலம், இந்தியா-கனடா உறவுகள் புதிய நிலைக்கு செல்லும் என நம்பப்படுகிறது.



# சிட்னி கடற்கரைத் தாகுதலில் உயிரிழந்தவரின் உறவினர்கள் கனடாவில் துக்கம் அனுஷ்டிப்பு

ஆஸ்திரேலியாவின் சிட்னி, போண்டி கடற்கரையில் ஞாயிற்றுக் கிழமை யூதர்களின் 'ஹனுக்கா' திருவிழாவின் போது நடந்த துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டவர்களில் ஒருவரான ரப்பி எலி ஷ்லாங்கரின் கனடா டொராண்டோவில் உள்ள குடும்பத்தினர், ஒரு அன்புக்குரியவரை இழந்து துக்கத்தில் வாடுகின்றனர்.

"அவர் வாழ்க்கை, நேர்மறை ஆகியவற்றால் நிறைந்திருந்தார்" என்று நவோமி பிளாக்ஸ் ஞாயிற்றுக் கிழமை இரவு கனடாவில் ஸி.ரி.வி. செய்திக்கு அளித்த பேட்டியில் கூறினார்.

"யூத மதத்தின் ஒளியை உலகிற்கு கொண்டு வருவது அவரது பணியாக இருந்தது, அவர் இப்படி சோகமாகக் கொல்லப்படும் வரை அதைச் செய்தார்." - என்றார் அவர்.

ரப்பி ஷால்ங்கர் தனது மாற்றாந் தந்தையின் சகோதரர் என்றும், டொராண்டோவிற்கு வெளியே குடும்ப நிகழ்வுகளின் போது அவரைச் சந்தித்து வந்தார் எனவும் பிளாக்ஸ் கூறினார்.

ஞாயிற்றுக்கிழமை சிட்னியின் பாண்டி கடற்கரையில் ஹனுக்கா கொண்டாட்டத்தின் போது இரண்டு துப்பாக்கிதாரிகள் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் ஒரு குழந்தை உட்பட பதினாறு பேர் கொல்லப்பட்டனர்.

உலகளவில் பொது மக்களுக்கு சேவை செய்யும் மற்றும் முக்கிய யூத விடுமுறை நாள்களில் நிகழ்வுகளுக்கு நிதியுதவி செய்யும் ஆர்த்தடாக்ஸ் யூத பொது சேவை அமைப்பான சபாத், இறந்தவர்களில் ஒருவரை போண்டியின் சாபாத்தில் உதவி ரப்பியும் நிகழ்வின் அமைப்பாளருமான ரப்பி எலி ஸ்க்லாங்கர் என்று அடையாளம் கண்டுள்ளது.

ஷ்லாங்கர் 18 ஆண்டுகளாக சமூகத்தில் ஒரு ரப்பியாகவும் மதகுருவாகவும் பணியாற்றி வருகிறார் எனவும், மனைவி மற்றும் குழந்தைகளை விட்டு அவர் காலமாகி விட்டார் என சபாத் கூறினார்.

# இளம் பெண் மீது பாலியல் வன்கொடுமை சாரதி பயிற்றுநர் பீல் பொலிஸாரால் கைது




கனடாவின் மிசிசாகா நகரில் இளம்பெண்ணை பாலியல் வன்கொடுமை செய்தார் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பில், பொலிஸார் சாரதி பயிற்றுநர் ஒருவரை பீல் பொலிஸெ கைது செய்துள்ளனர்.

இந்த சம்பவம் கடந்த நவம்பர் 27 அன்று நடைபெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குற்றம் சாட்டப்பட்ட சாரதி பயிற்றுநர், முன்கூட்டியே ஏற்பாடு செய்யப்பட்ட சாரதி பயிற்சிக்காக, மாணவியை அவரது வீட்டிலிருந்து சிவப்பு நிற 2015 டொயோட்டா கொரோல்லா காரில் அழைத்துச் சென்றார் எனக் கூறப்படுகிறது.

பயிற்றுநர், மாணவியிடம் கார்க்சன் சமூக நிலையத்திற்கு அருகிலுள்ள வாகன நிறுத்துமிடத்தில் வாகனத்தை நிறுத்தி பயிற்சி செய்யுமாறு அறிவுறுத்தியுள்ளார்.

அப்போது வாகனம் நிறுத்தப்பட்ட நிலையில், மாணவியை பாலியல் வன்கொடுமை செய்தார் எனக் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில், 48 வயதுடைய அமீர் குல் என்பவரை நவம்பர் 29 அன்று பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அவர் மீது பாலியல் வன்கொடுமை குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. இந்த நபரினால் மேலும் பாதிக்கப்பட்டவர்கள் இருக்கக் கூடும் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளமையுடன் பாதிக்கப்பட்டிருந்தால் அது குறித்து அறியத்தருமாறு கோரியுள்ளனர்.

# இலங்கையில் விவசாயத்துறையின் மீட்சிக்குக் கனடா உதவும் என உறுதி

## கனடிய தூதுவர் இசபெல் மார்ட்டின் தெரிவிப்பு



டித்வா புயலால் ஏற்பட்ட பாரிய இழப்பை அடுத்து பாதிக்கப்பட்ட விவசாயத் துறையின் மீட்சிக்கு உதவி வழங்கத் தயாராக இருப்பதாக கனடா, இலங்கைக்கு உறுதியளித்துள்ளது.

நிதியமைச்சில் நேற்றுமுன்தினம் நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் அனில் ஜெயந்த பெர்னாண்டோவுடன் நடத்திய சந்திப்பின் போது கனடிய தூதுவர் இசபெல் மார்ட்டின் இந்த உறுதிமொழியை வழங்கி யுள்ளார்.

இலங்கை அரசாங்கத்தின் கட்டமைக்கப்பட்ட மீட்புத் திட்டத்தை கனடா பாராட்டுகிறது என்றும், இலங்கை அதன் முறையான சேதம் மற்றும் தேவை மதிப்பீட்டை முடித்தவுடன் ஒட்டாவா ஆதரவை வழங்கத் தயாராக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பேரழிவுக்குப் பிந்தைய மதிப்பீட்டை இறுதி செய்தவுடன், சூறாவளி மற்றும் அதனுடன் தொடர்புடைய வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்ட விவசாய வாழ்வாதாரங்களை மீட்டெடுப்பதில் கவனம் செலுத்தி, முன்னுரிமைப் பகுதிகளில் அதிகபட்ச உதவியை வழங்க கனடா தயாராக உள்ளது என்றும் கனடியத் தூதுவர் தெரிவித்துள்ளார்.



# தென்கிழக்கு எட்மண்டனில் மர்ம நபர்களினால் பஞ்சாப் இளைஞர்கள் இருவர் சுட்டுக்கொலை!

கனடாவில் நடந்த தாக்குதலில் பஞ்சாபைச் சேர்ந்த இரண்டு இந்திய வம்சாவளி இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

கனடாவின் தென்கிழக்கு எட்மண்டனில், பஞ்சாபைச் சேர்ந்த இரண்டு இந்திய வம்சாவளி இளைஞர்கள், அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர். கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை இந்தச் சம்பவம் நசைபெற்றுள்ளது.

இறந்தவர்கள் பஞ்சாபின் மான்சாவில் உள்ள உத்தத் சைதேவாலா கிராமத்தைச் சேர்ந்த ரன்வீர் சிங் (வயது 18) மற்றும் பாராவைச் சேர்ந்த குர்தீப் சிங் (வயது 27) மற்றும் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். தொழில் வாய்ப்புகளைத் தேடி இரண்டு இளைஞர்களும் தனித்தனியாக கனடாவுக்குச் சென்றிருந்தனர்.

அவர்கள் அங்கு வேலை தேடி வந்த நிலையில், துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட சம்பவத்தில் உயிரிழந்தமை விசாரணையில் தெரிய வந்தது.

தங்கள் நண்பர் ஒருவரின் பிறந்த நாள் நிகழ்வுக்காகச் சென்றிருந்த சமயமே இருவரும் சுட்டு கொல்லப் பட்டிருக்கின்றார்கள்.

தகவல் அறிந்து பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்த போது இருவரும் உயிரிழந்து விட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கனடா பொலிஸார் வேறு சில பஞ்சாப் இளைஞர்களைச் சுற்றி வளைத்து இந்த விவகாரம் குறித்து விசாரித்து வருகின்றனர் என சில வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.